# திராவிடநாடு

26—4—59 | வார வெளியீடு | விலை 16 காசு


# பண்டிதரும் பகர்கிறார்!

—[***]—

"நான் மத நம்பிக்கையில்லாதவன் என்று பலபேர் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்று. மதத்தைப் போர்வையாகப் பயன்படுத்தும் புல்லுருவிகளைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. சும்மாயிருக்கும் சோம்பேறிகளைவிட, கெடுதல் செய்கிறவன்கூடத் தேவலாம். அவன் கெடுதல் செய்தாலும்கூட, அவனைப் பொறுத்தவரையில் 'சரி' என்று நினைத்தாவது செய்கிறான். ஆனால், மதத்தின் பெயரைச் சொல்லி சோம்பல் வாழ்க்கை நடத்துகிறவர்கள் அப்படியல்ல. மதத்தைத் திரையாகப் பயன்படுத்தி, எந்த வேலையும் செய்யாமல், வாழும், பயனற்ற கூட்டம் இது. இவர்களைப் பார்த்தாலே, எனக்குப் பிடிப்பதில்லை."

-- பண்டிதநேரு.

*என்று அரித்துவாரத்துக்கருகிலுள்ள சப்தரிஷிகள் ஆசிரமத்தில் கடந்த ஏப். 13-ந் தேதி பேசுகையில் வெளியிட்டார்.*

## செய்திச் சேதி

உலகிலேயே மிக உயர்ந்த இடத்திலிருக்கும் நகரம் தங்கள் நாட்டிலிருப்பதாகச் சீன சர்க்கார் தெரிவித்திருக்கிறது. சிங்கைய் எனும் மாகாணத்தில், தங்க்ளா மலைத் தொடரிலுள்ள வென் சுவான் எனும் நகரம்தான் அது. கடல் மட்டத்துக்குமேல் பதினாறாயிரம் அடி உயரத்திலுள்ளதாம். இந்த நகரத்தைக் கட்டி நிர்மாணித்து வேலைகள் யாவும் முடிந்துவிட்டதாம். இமய மலைச் சாரலிலுள்ள பாரி என்கிற இடம்தான், இதுவரை, உலகத்திலேயே உயர்ந்த ஊராகக் கருதப்பட்டு வருகிறது. குதிரைகளும் வன மிருகங்களும் வசித்த இடத்தைச், சீனர்கள், அழகான ஊராக ஐந்து ஆண்டுகள் சிரமப்பட்டு உருவாக்கியிருக்கிறார்கள்.

*

ஒரு மகிழ்ச்சிச் சேதி! 'தமிழ்-ரஷ்யமொழி' அகராதி ஒன்றினைத் தயாரிக்கும் வேலையில், ருஷிய அரசின் இலாகா ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அடுத்த ஆண்டு ரஷியாவில் கூடவிருக்கும் உலக மொழி வல்லுநர் மாநாட்டின்போது, இது வெளியிடப்படுமாம்.

*

மாவ் மாவ் இயக்கத் தலைவரான சென்யட்டாவைப் பிடித்து, ஏழாண்டுகள் தண்டனை கொடுத்து இருந்த நல்லவா தென் ஆப்பிரிக்கசர்க்கார்! தண்டனை முடியுமுன்னரே, அவரை இந்தக் கிழமை விடுதலை செய்திருக்கிறார்கள்.

*

காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நான்காண்டுகளாக விடாது போராட்டம் நடத்தி வருகிறதல்லவா, அல்ஜீரியா? இந்த விடுதலைப் போராட்டத்தில் இதுவரை மொத்தமுள்ள மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதியினர் உயிரிழந்திருக்கிறார்களாம்! சுதந்திர வேட்கைக்காக எதுபோயினும் என்ன என்று துணிவுகொண்ட அவர்களை என்னவென்று வர்ணிப்பது!!

*

அமெரிக்காவிலுள்ள ஒக்லஹாமா மாநிலத்தில் 52 ஆண்டுக் காலமாக மதுவிலக்கு அமுலிலிருந்தது. தொடர்ந்து இருக்க வேண்டுமா? வேண்டாமா என்பதை முடிவு கட்டுவதற்காகக் கடந்த கிழமை 7ந் தேதி, பொதுவாக்கெடுப்பு நடத்தினார்களாம். அதில், பெரும்பான்மையானவர்கள், மதுவிலக்கு வேண்டாம் என்று வாக்களித்ததால் மீண்டும் மது அருந்துதல் அங்கு சட்டப்படி அனுமதிக்கப்படப் போகிறதாம்!!

*

இதுவரை, எம்மானைத் தேரில் வைத்து, பக்தகோடிகளும், 'படி' போட்டு ஒவ்வொரு பண்ணையிலிருந்து அனுப்பப்பட்ட ஆட்களையும் வைத்தே, இழுத்து வந்தார்கள் திருவாரூரில்! திருவாரூர்த் தேரழகு என்பார்கள். இந்த வேலைக்கு, தஞ்சை மாவட்டத்திலுள்ள பண்ணையாட்கள் வராத காரணத்தால், இரண்டொரு ஆண்டுகளாக அங்கு தேரோட்டமே நடக்காமலிருந்தது. இப்போது, கோயில் நிர்வாகிகள்கூடி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். 'மிஷின்' வாங்கி, அதன் மூலம், தேரோட்டம் நடத்தப் போகிறார்களாம்! டிராக்டர்களா அல்லது லாரிகளா, என்ன 'மிஷின்' என்று தெரியவில்லை. சமீபத்தில், முடிவு செய்திருக்கிறார்கள், பக்தி வளர்க்கும் மெய்ஞ்ஞானிகள்!!

*

வேறெங்கும் கண்டிருக்க முடியாது, இந்த அதிசயத்தை! வடக்கே உள்ள லெடோ எனும் ஊரில் டிரைவர் இல்லாமலே ரயில் என்சின் ஓடியதாம்!! தண்ணீர் பிடிக்க நிறுத்தியிருந்த என்சின் ஏதோ வேகத்தில், பிய்த்துக்கொண்டு கிளம்பி, இரண்டு ஸ்டேஷன்களுக்குமேல், தானாகவே ஓடிக்கொண்டிருந்ததாம். மூன்றாவது ஸ்டேஷன் மாஸ்டர் இதையறிந்து, என்சின் வரும்போது பாய்ந்து ஏறி, அதை நிறுத்தினாராம்!!

*

பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளைப் பிரம்பால் அடிக்கலாமா, கூடாதா? இதுபற்றி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவில் 'கூடாது' என்று ருஷியாவால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானம் ஏற்கப்படாமல், இப்படிப் பிரம்பால் அடிப்பது ஆசிரியர்கள் உரிமையென்றும், அது தவறில்லையென்றும் முடிவு கட்டப்பட்டிருக்கிறது.

# கழகமும் கலைஞர்களும்!

......மேலும், கழகக் கலைஞர்கள் எல்லாம், ஏதோ திடீரெனக் கழகத்திற்கு வந்தவர்கள் அல்லர்! இராசேந்திரனை எடுத்துக்கொண்டால், அவர், எனக்கு எதிரில் வர பயந்துகொண்டிருந்த பருவத்திலிருந்து இன்றுவரை கழகத்தில் இருப்பவர்!

அப்படியேதான் பிறரும், பல காலமாகக் கழகத்தில் இருப்பவர்கள்; புகழ்பெற்ற கலைஞர்களான பிறகு, கழகத்திற்கு வந்தவர்கள் அல்லர்!

**அவர்கள் கழகத்தில் இருப்பதற்கு, கழகத்தால் கலையே வாழுகிறது என்பதும் ஒரு முக்கியமான காரணம்.**

கழகத்தில் உள்ள கலைஞர்களை, தனியாகப் பிரித்துப் பேசுவதைக்கூட நான் விரும்புவதில்லை.

கழகத்தில் சில டாக்டர்கள் இருக்கிறார்கள்; சில எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள்; பேராசிரியர்கள், ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்; உழவர்கள் இருக்கிறார்கள்: தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; அவர்களைப்போலவே சில கலைஞர்களும் இருக்கிறார்கள்; அவ்வளவுதான்!

—சி. என். அ.

...17] ஆண்டு சந்தா ரூ. 8 [26-4-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 41

# கற்கண்டு இதோ!

மாற்றானை வெற்றிகண்டு, மன்னாதி மன்னர்கள் திரும்பிய சேதிகேட்டு, மாநிலம் மகிழுமாம்! பாவலர் பரணிபாட, நாவலர் நல்லுரை வழங்க, வீதிகளில் விழாக்கோலம் நிறைய, ஆரத்தி ஏந்திய ஆரணங்குகளும், ஆரவாரம் எழுப்பிடும் நகர மாந்தரும் நிரம்பித் தென்படுமாம், அந்நாள் தமிழகம்!!

அந்தப்பரபரப்பும், ஆர்வமும், சென்னைமாநகராட்சியில் சென்ற கிழமை தி. மு. க. கண்ட சிறப்புறு வெற்றி கேட்டு, நாட்டின் பல பகுதிகளிலும் தென்பட்டிருக்கிறது. கழகந்தோறும், களிப்புக் கொடி! கானையர் முகமெல்லாம் உணர்ச்சிக்கடல்! இல்லங்கள் பலவற்றிலே இனிப்புகள் வழங்கினர்! ஏழையர் தம் விழிகளிலே புதுமலர்ச்சி!—வெற்றி பெற்ற சென்னையில் மட்டுமல்ல, தமிழ் பேசும் மூதூர்களிலெல்லாம் காணக் கிடைத்திருக்கிறது. டெலிபோனுக்கடியிலேயிருந்தோர், என்ன சேதி என வானொலியின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தோர், வந்துவிட்டதா பத்திரிகையென்று இரயில் நிலையங்களை முற்றுகையிட்டோர், உறவினர்களுக்குத் தந்தி கொடுத்து உசாவியோர், ஊர்தோறும் இருந்திருக்கிறார்கள் சென்ற கிழமை. தூத்துக்குடி—கன்யாகுமரி—நெல்லை—மதுரை—இராமநாதபுரம்—கோவை—சேலம்—சிதம்பரம்—திருச்சி—தஞ்சை, இப்படி, தலைமை நிலையத்துக்கு வந்துகொண்டிருந்த 'போன் பேசி'ச் செய்திகள், கொஞ்சமஞ்சமல்ல. தெரிந்தவர்களிருந்த இடமெல்லாம், ஓட்டுகள் எண்ணப்பட்ட ஒவ்வொரு நாளும், தந்திக்கும் டெலிபோனுக்கும் பல ரூபாய்கள் செலவழிந்திருக்கும். போர்க்காலச் செய்தியைவிட, காந்தியடிகள் பெற்ற சுதந்திர நாளன்றுபோல, ஆர்வமும் பரபரப்பும் ஏற்பட்டது ஆங்காங்கும்.

சென்னை நகராட்சி மன்றத் திடலிலே கூடியிருந்தோர் தொகை, பல இலட்சமிருக்கும்! அவர்களிலே, ரிக்ஷா இழுப்போர், குதிரைவண்டி ஓட்டுவோர், குமாஸ்தாக்களாயிருப்போர், தொழிலாளிகள், ஏராளம்; ஏராளம். "வெற்றி, தி. மு. க-வுக்கு" என்று ஒலிபரப்பிமூலம், அதிகாரிகள் அறிவித்ததும், காண வேண்டுமே, காட்சியை! கரங்கள் ஒலிக்கும், அருகிலுள்ள கடலை, வம்புக்கிழுப்பதுபோல! இருவண்ணக் கொடிகள், அசையும் வர்ணப் புறுக்கள் என! "தி. மு. க. தோற்றது. ஓட்டு வித்தியாசம் 32; 27..." என்கிற தகவல்கள் வரும்போதெல்லாம், கொட்டப்பட்ட 'ச்சுச்சு' ஓசையும், தென்பட்ட மயான அமைதியும், மனதை உருக்கியது. இவ்வளவுபேர் இதயத்திலும் புகுந்திருக்கும் பாக்கியம் பெற்றோமே எனும் பூரிப்பால், உடம்பே சிலிர்த்தது. தோல்விச் செய்தி எட்டியபோதெல்லாம், துவண்டனர், ஏதோ பேரிழப்புக்கு ஆளானோர் போல! வெற்றிச் செய்தி எட்டியபோது, 'வெறி' கொண்டோரே ஆயினர்! அதிலும், வாக்கு எண்ணிக்கையின் கடைசி நாள், வரிசை வரிசையாக, 'தி. மு. க.' என்று வந்து கொண்டேயிருந்தது அறிவிப்பு. 99-முடிந்து, 100-ம் முடிந்து, அதுவும் நமக்குத்தான் என்று கேட்டதும் பலர், ஆனந்தக் கூத்தே ஆடினர்! தூரநின்று கவனித்த எமக்கு ஒரு தோழர்; எழும்பி எழும்பிக் குதித்தபோது, உள்ளபடியே பயம் ஏற்பட்டது—எங்கே, அவருக்கு ஆனந்தத்தால், இருதயம் வெடித்துவிடுமோ எனும் அச்சம் காரணமாக!!

*

நாடெங்கும், நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களிலே, பல இடங்களிலே, காங்கிரஸ் கட்சி வீழ்ச்சி அடைந்திருக்கிறது. கோவை—மதுரை—தஞ்சை—சேலம் போன்ற இடங்கள், தமிழகத்தின் பெரு நகரங்கள். அங்கெல்லாம், காங்கிரஸ் தோற்றிருக்கிறது! அப்படிப்பட்ட ஊர்களில், நமது கழகத்தவரும் நின்று, வெற்றிகண்டிருக்கிறார்கள்! இது நாள் வரை, முனிசிபல் தேர்தல் என்றாலே இன்னதென அறியாத நம்மவர், ஏராளமாகச் சென்றிருக்கின்றனர். கட்சி முத்திரையின்றிக் கவுன்சிலராக ஆங்காங்கும் ஓரிருவர் இருந்ததுண்டு, முன்பு. இம்முறை, கட்சி முத்திரையோடு, ஓரிருவர் இருந்த இடங்களிலே எட்டு, பத்து என்கிற அளவிலும்; ஒருவருமே இலாத இடங்களிலே, இருவர் நால்வர் என்கிற எண்ணிக்கையிலும், கழகத் தோழர்கள் நுழைந்திருக்கிறார்கள்!! ஏடுகளை எடுத்து, எந்த ஊர் தேர்தல் முடிவைப் பார்த்தாலும், அதிலே, தி. மு. க. என்கிற எழுத்து, இல்லாமலில்லை. இந்த ஊரில் ஆள் கிடைக்குமா — அந்த ஊரில் ஒருவர் உண்டா — ஏதோ, தஞ்சை திருச்சி போன்ற சில இடங்களில் தான் செல்வாக்கு — என்று, சீமான்கள் பேசுவதுண்டு நம்மைப்பற்றி! அச்சீமான்களின் கைலாகு பெறும் இடத்திலிருக்கும் 'கனம்' காமராஜரும், அந்த எண்ணத்தால்தான் தி. மு. க-வைத் தெருப் பிச்சைக்காரனுக்கு ஒப்பிட்டார்!! நடந்து முடிந்த நகரமன்றங்களின் தேர்தல் நன்றாகக் காட்டிவிட்டது, ஊர்தோறும், 'நாம்' இல்லாமலில்லை — இருப்பது மட்டுமின்றி மக்களை அணுகி ஓட்டுக்கேட்டு வெற்றி பெறக்கூடியவர்களும் இருக்கிறார்கள் — என்கிற, மாபெரும் உண்மையை. அதோடு, சென்னைமாநகராட்சியின் மன்றத்தை ஆளும் அளவுக்கு ஆற்றலை

# பணத்தோட்டம் காங்கிரஸ்!

யும் பெற்றிருக்கிறது தி. மு. க. என்கிற சேதியும், அகில உலகுக்குக் கிடைத்திருக்கிறது இம்முறை'!

இத் தேர்தல், நமக்கு முதல் தேர்தல், காங்கிரசுக்கோ, பழகிப்போன தேர்தல். 'பி. ஏ.' பட்டம் பெற்றவனை, அரிச்சுவடிபடிப்பவன் வென்றதுபோல் எனலாம். அதனால்தான், நமக்கு வெற்றிக்களிப்பு, கரைபுரண்டோடுகிறது! நமது கழகத்தவர், அகமும் முகமும் மலரக் காட்சி தருகின்றனர்!! முதல் தேர்தல் என்பதோடு, ஒவ்வொரு ஊரிலும், இந்தத் தேர்தல்கள் எப்படி நடைபெற்றன என்பதை அறிந்தோருக்கு நாம் பெற்றுள்ள "ஒரு இடம், பத்து இடம், நாற்பத்தைந்து இடம்" என்பதிலே பொதிந்திருக்கும் அருமை தெரியும். பெரும்பாலும், காங்கிரசின் சார்பிலே நின்றவர்கள், பணவசதி படைத்தவர்கள்! நம்மவர்களோ, அன்றாடம் காய்ச்சிகள்! காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு, 'கனம்'களின் கருணை உண்டு; சென்னையிலே 'கருணை' வீடெல்லாம் வழிந்தும் ஓடியது: கையேந்திக்கூட ஓட்டுக் கேட்டார்கள், கனம்கள். காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள் பலர்வசம், பல இடங்கள், காட்டிவிடப்பட்டன. அவர்கள், மாடிவீடுகளையும் மவுசுகள் படைத்தோரையும், வட்டமிடத் தயங்கவில்லை. நமக்கு இருந்த வசதிகளெல்லாம் நமது தோழர்கள் தான்! பண ஓசை கேட்கக் கேட்கப் பதறியதுண்டு, நமது கழகத்தவர். ஐயயோ! அந்தக் குப்பத்துக்காரரோடு பேசியிருக்கிறார்கள், காசு மூட்டையும் கையோடு போயிருக்கிறது, சத்தியம் செய்து வாங்குகிறார்கள், என்று தேர்தலுக்கு முன்னாள் இரவு, பல ஊர்களிலே கை பிசைந்துகொண்டு நின்றனர், கழகத் தோழர்கள். சென்னையிலும்தான்! இப்படியெலாமிருந்தும், நம்மால் வெற்றி காண முடிந்திருக்கிறது எனின், உள்ளபடியே இது சாதாரண வெற்றியல்ல. உழைப்புக்கு வெற்றி! உண்மைக்குக் கிடைத்த வெற்றி!!

நாம் ஆனந்தமடையும் இந்த வேளையில், எப்படி கிடைத்தது இந்த வெற்றி, என்கிற ஆராய்ச்சியில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். இன்று பல இடங்களிலே நாம் பெற்றிருக்கிற ஓரளவு வெற்றிக்கும், சென்னை மா நகரிலே பெற்ற பெரு வெற்றிக்கும், காரணம் கண்டு பிடிப்பதிலே நேருவின் திருமகளார் இந்திரா காந்தி அவர்கள் உட்பட, காங்கிரசின் மேலிடமான காரியக் கமிட்டிவரை, விரைவில் கூடி ஈடுபடப் போகிறார்களாம். அவர்கள் கண்டு பிடித்து வைப்பது, எதுவாகவேனுமிருக்கட்டும்! ஆனால் ஒன்று; நேற்று வரை நேரு அவர்கள் 'தி. மு. க.' ஏதோ எறும்புக்குச் சமானம் என்று கருதியவர்! காரியக் கமிட்டியிலே பலருக்கு, 'நாம்' தெரியோம்! இன்று அவர்களே கூடியமர்ந்து கூட்டம் போட்டு ஆலோசிக்கப் போகிறார்கள் எனின், அதுவே ஒரு வெற்றிதானே, நமக்கு!!

அதைக்கூட, வெற்றி விழாவில் ஒன்றாகக் கொண்டாடக் கூடிய நிலையிலிருப்பவர்கள் நாம் என்பதை அவர்களறியார். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் நமக்கு, பெரியதொரு தடையாக இருந்து வருவதே, நாம் யாரென்பதையே பலர் அறியாத நிலை நீடிப்பதுதான்! நேற்று முளைத்த ஜனசங்கத்தைப்பற்றி நேருவும் அறிவார்; அவர்களை உபகண்டமும் உணரும்-அடிக்கடி தகராறுகளுக்கு ஆளாகும் சோஷியலிஸ்டு இயக்கத்துக்குக்கூட ஒரு மதிப்பு உண்டு வடக்கிலும், நமது காங்கிரசாரிடத்திலும். ஆனால், 'நாம்' என்றால், இதுவரை ஏதோ தானோக்கள் என்றே எண்ணினர்! அது ஒரு கும்பல்-அறிவற்ற கூட்டம்-சிலர் கூடிநின்று கத்துவார்கள்-சின்னக்கட்சி-இச்சே, அதை மனதால்கூட நினைக்காதீர்-இப்படித்தான், எங்கும் ஒரு எண்ணம். இங்கிருந்து செல்லும் நமது மதிமந்திரிகளும், இப்படியே பேசுவர் போலும் அங்கு. எந்த ஏடும் அறியாது! எவரும் தெரியார் நம்மை!! இப்போது, சென்னை வெற்றி கண்டு, இந்திரா தேவியார் அறிக்கை விடுகிறார்கள்; காங்கிரஸ் காரியக் கமிட்டியே கூடியமர்ந்து, யோசிக்கப்போகிறது. கடுகாகத் தென்பட்டோம், டில்லிக்கு, இதுவரை! இப்போது வீரவாள் தயாராகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது இத்தேர்தல்!! இதற்கே நாம் ஒரு வெற்றி விழாவன்றோ கொண்டாட வேண்டும்? இருதயத்தில் ஏந்தியிருக்கும் நமது இலட்சிய முழக்கத்தை மாற்றாருக்கெடுத்துரைக்க, இத்தனை நாளும், நாம் பட்டபாடு கொஞ்சமா! எத்தனையோ தடவை நமது கருத்துக்களைத் தெரிவிக்கக் கருப்புக் கொடிகளை ஏந்தினோம்-கண்டனக் கூட்டங்களை நடத்தியிருக்கிறோம்-தடைகளை மீறியிருக்கிறோம்-தண்டவாளத்திலும், உயிரைத் துச்சமென நினைத்துப் படுத்தோருண்டு-சிறைக்குச் சென்றோர், ஏராளம்-சித்ரவதைக்காளானோர், கண் முன்னே தென்படுகிறார்கள்-குண்டுக்கு இரையாகி கோரச் சாவைப் பெற்றவர் கொஞ்சமா-குடலறுந்தோர், உடலுறுப்பிழந்தோர், சாவென அலறியோர், ஒருவரா இருவரா-இப்படிப் பட்ட தொல்லைகள் மட்டுமின்றி, மானமே பெரிதென வாழும் மரபினரான நாம், முட்டாள்கள், காட்டுமிராண்டிகள் எனும் சுடுசொற்களையுமன்றோ தாங்கினோம்-எதிரிகளின் கொடுமைகளுக்கு மஜீதுபாண்டியன், சாமி போன்றோரை இழந்ததையுமா மறக்க முடியும்?-எனவே, நாம் இன்று கண்டுள்ள வெற்றி, தியாக வெற்றி! தன்னடக்கம் பெற்ற வெற்றி! உழைப்பில் பெற்ற வெற்றி! உத்தமர்கள் பெற்ற வெற்றி! ஆனால், ஊராளும் காமராஜர், ஏதோ, காரணம் சொல்லுகிறார்; ஒவ்வொரு மந்திரியும் ஒரு காரணம் சொல்ல முயற்சிக்கக்கூடும். ஒன்றுமட்டும் உண்மை, காங்கிரஸ், சரிந்து வருகிறது! சென்னையில்

(13-ம் பக்கம் பார்க்க)

# குணத்தோட்டம் நாம்!!

# 'முக்காடு' போடுகிறார்கள்!

"கேட்டியாண்ணே, சேதி! 'ஊட்டி'க்குப் போயிருக்குதாம்லே, நம்ப சர்க்கார்..."

ஊரான் சொத்திலே உடம்பு குளிக்கிறவங்க, ஊட்டிக்கு என்ன தம்பி! காசிக்குக்கூடப் போவாங்க 'கவர்ன்மெண்டை'த் தூக்கிக்கிட்டு..."

"தி. மு. க. இல்லேன்னா, அதையும் செய்யும் இந்தச் சர்க்கார்."

*

"ஊட்டியிலேயிருக்கிற மக்களுக்கும் தினாமுனாகானாக்களுக்கும் ஏதோ சண்டையாம்லே. அதனாலேதானே, வரமாட்டோம்னு பிடிவாதமாச் சொல்லிட்டாங்களாம்"

"யோ! எவன்யா சொன்னான் அப்படி? தி. மு. க. வந்து, மக்கள் கிட்டே சண்டைக்குப்போகவாவது? அது, உங்ககட்சி செய்யும்! அதானே, ஊட்டியிலே விளையற உருளைக் கிழங்குக்கு வரி போட்டுது. ஊராரை மிரட்டுது! சுடுது!!"

"அப்படியா? ஆனா மந்திரிங்க, இப்படில்லே பேசறதாக் கேள்விப்பட்டேன்..."

'ஏனயா! ஊட்டி அழகான இடம்தான் குளிர்ச்சி வழங்க; அதைப்போல, ஒரு இடம் கிடைக்காது யாருக்கும். அங்கேபோய் சொந்தச்செலவிலே தங்கப்போற, யாரையும், மறிச்சி சத்யாக்கிரகம் செய்யலே, தி. மு. க. ஊரான் பணத்திலே, எதுக்கு உல்லாசம்? வீணா, பத்து நாள் போய்த் தங்கிட்டு வர்றதுக்கு, ஏன் வரிப் பணம் கரியாகணும்! அப்படின்னு கேட்குது..."

"அப்படியா? ஊட்டிக்குப் போயிருக்கிற ஒவ்வொரு சட்டசபை மெம்பரும், அவுங்க சொந்தச் செலவிலே போகலையா!"

"அப்படி மட்டும் சர்க்கார் சொல்லட்டும். எத்தனைபேருக்கு, ஊட்டி மக்களைப்பார்த்து, அவுங்களுக்கு உற்சாகம் ஊட்டணும்கிற எண்ணம் வருதுன்னு தெரிஞ்சிப்போயிடும்? சொந்தச் செலவிலேயே போய் வரணும்னு சொன்னா, பல மந்திரிங்களே, அங்கே போகமாட்டாங்க! தெரியுமில்லே!!"

"அப்ப அநியாயம்தான். நான் என்னமோ, தி. மு. க-வுக்கு ஊட்டின்னா பிடிக்காது போலிருக்கின்னுல்லே, நினைச்சேன்"

"வேறென்ன கயிறுதிரிக்க முடியும் இந்த மந்திரிகளாலே! என்ன பதில் சொல்லமுடியும்? முகத்தை மூடிக்க, ஏதேதோ உளர்றாங்க."

*

"காம்ரேட்! கட்சியிலே, இதைப் பற்றி, அவசியம் விவாதிக்கணும். அதெப்படி, ஏழைகளுக்காகப் பாடுபடும் நாம்ப, ஊட்டிக்குப் போறதை ஆதரிக்கிறது கொஞ்சம் கூட நல்லால்லியே!

"இதோ, பார்! நீ இப்படி, அடிக்கடி, 'டிராஸ்கீசம்' பண்றே. கட்சித் தலைமை ஒருமுடிவு எடுத்தா நாமெல்லாம், அது தப்புன்னா கூட, சரின்னுதான்வாதாடணும். அதான், மார்க்சியப்பாதை"

'மண்ணாங்கட்டி! மாதம் நாலணா சந்தா செலுத்தும் சங்கிலிகேட்டிருன், எண்ணே நம்ப கலியாணசுந்தரம் தொழிலாளர் தலைவர் தானே. இவரு ஒத்து ஊதலாமா சர்க்காரோடேன்னு? என்ன பதிலைச் சொல்றது?"

"எதையாவது சொல்லு! இப்பத்தான் நம்ப கேரள சர்க்கார் இரண்டாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடிச்சி, அது இதுன்னு எதையாவது இரண்டு 'பாயிண்டை' விருவிருன்னு வீசு!!"

"வீசலாம்! வீசலாம்!! ஆனா, நம்ப தொழிலாளிங்க மத்தியிலே, தி. மு. க. செஞ்சதுதான் நியாயம்னு, பேச்சு நடக்குது. உள்ளபடியே, காம்ரேட்! மாஸ்கோவிலே ஒண்ணுன்னா, இங்கே பாராட்டு நடத்தறோம்--அமெரிக்காவோடே ஆதிக்கத் தர்பாரைக் கண்டிச்சிப் பேசறோம்—பணமுதலைகள்னா பல்லை நறநறன்னு கடிக்கிறோம். பணத்தைக் கரியாக்கிற ஒரு காரியத்துக்கு, நம்ப எம். எல். ஏ-க்களும் பின்னாலே போறோம்னா..."

"என்னப்பா! என்ன!! இதோ பார், 'புல்கானின் படம்...ஜாக்கிரதை...கட்சியிலே சொல்லி...... ஆமாம், பேசாமெப்போ..."

* ●

உதகமண்டலத்திலே, சட்டசபை, கூடியிருக்கிறது, 20ந் தேதி.

திராவிட முன்னேற்றக் கழகம் தவிர, ஏனைய எதிர்க்கட்சிகளும், ஆட்சிக் கட்சியுடன் போயிருக்கிறது அங்கே.

எம்.எல்.ஏ.க்கள், தாசப்பிரகாஷ் ஓட்டலில், தங்குகின்றனராம்.

அமைச்சர்கள், தத்தம் வசதிக்கேற்ப, இடங்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனராம்.

குளிர், தாங்கமுடியவில்லையாம்!

வீம்புடன், போயிருக்கின்றனர், ஆட்சியாளர். ஆனால் செய்வது

தவறு என்கிற அச்சம் அவர்களுக்கும் இருக்கிறது என்று தெரியவருகிறது, சேதிகள்மூலம்.

திராவிட முன்னேற்றக் கழகம், போகவேண்டாமெனக் காரணத்தோடுதான், சொல்லிற்று. பணவிரயம்! பயனில்லாக் காரியம்!!—என்பதை: எவரும் மறுக்க முடியாது.

உதகையில் ஒவ்வோராண்டும், அமைச்சர்கள் போவதுண்டு; பூந்தோட்டங்களுக்குப் பரிசுகள் தருவதுமுண்டு — அவர்களைப் போகவேண்டாமெனக் கண்டித்ததில்லை நாம்.

காங்கிரஸ் தலைவரும், கம்யூனிஸ்டுத் தோழரும், கட்சி வேலையாக, ஊட்டிக்குப் போவதை, அடாது என்று தடுக்கவில்லை, தி. மு. க.

வசதியுள்ளவர்கள் உல்லாசம் தேடி ஒவ்வொரு கோடையிலும் போய்வருகிறார்கள்! ஏறும் இரயிலுக்கு எதிர்நின்று, 'ஊட்டிக்குப் போகாதே' என்று சத்யாக்கிரகம் செய்யவில்லை நாம்.

சட்டசபை கூடுவதேதன்பது' தனிப்பட்ட காரியமல்ல! அழிவது பொதுப்பணம்!! அது ஏன், அவசியமா, என்றே தி. மு. க. கேட்கிறது.

## சட்டசபையே?

சட்டசபையே சட்டசபையே
சென்னை ராஜ்ய சட்டசபையே
சட்டம் இயற்றி மாந்தர் வாழ்வை
சிறக்கச் செய்யும் சட்டசபையே
வெள்ளைக்காரன் போகுமுன்னே
வைத்திருந்த சட்டங்களில்
நல்லதில்லை என்று பலதை
நீக்கிவிட்ட சட்ட சபையே
அதனில் ஒன்று கோடை வாசம்
அதனைமட்டும் வைத்துக்கொண்டு
பதைபதைத்து ஊட்டிபார்க்க
போவதேனோ சட்டசபையே?
பத்துநாளின் பேச்சுக்காக
பணத்தை பாழாய் ஆக்க நீயும்
இத்தனை நாள் இல்லாதொன்றை
ஏற்றதேனோ சட்டசபையே?

—சு. மி. ஞாயிறு மலர்.

ஆடம்பரங்களை விரும்போம், காரில் கொடிகளைக் கட்டப் போவோம், மின்சார விளக்குகளைக் கூட அதிகம் எரிக்கோம், ஏனெனில் இதிலெல்லாம் சிக்கனம் செய்யச்சொல்லி உத்தரவுபோட்டிருக்கிறார் நேரு, என்று ஊர் தம்பட்டம் அடிக்கிறவர்கள், காங்கிரஸ்காரர்கள். இதோ, கண்ணெதிரே, ஊதாரித்தனம் செய்கிறார்கள்!!

வெள்ளையனே! உனக்கு ஊட்டி வாசம் ஒரு கேடா?-என்று, மந்திரி சபையில் உள்ள மாணிக்கவேலர் வேண்டுமானால் கேட்டதில்லை; காமராசர், கர்ச்சித்ததுண்டு, சுதந்திரத்துக்கு முன்பு,

காமராசருடைய குரு: சத்தியமூர்த்தியாருடைய பேச்சிலே உரமும் காரமும் ஏறும், இதுபோன்ற ஊதாரித்தனமென்றால், வெள்ளையன், மிரண்டு ஓடவேண்டும் அவருரை கேட்டு. அப்படிச் சீறுவார்.

இதற்கு முன்னிருந்த எந்த முதலமைச்சரும் இப்படிப் போகவில்லை! காமராசரோ, ஏழை பங்காளன். அவர் போகிறார், ஊட்டிக்கு, சட்டசபையுடன்!!

பதவியிலிருப்பதால், அனுபவிக்கும், ஆசை எழலாம், அவர்களுக்கு. ஆனால், இந்த எதிர்க்கட்சிகளுக்கு என்ன வேலை, அங்கே! அதுவும், ஏழைகள் தோழன் எனும் கம்யூனிஸ்ட்களுக்கு என்ன வேலை!!

நாங்கள் என்ன பத்துப் பேரா, இருபது பேரா, எங்களுக்காக என்ன செலவாகிவிடப்போகிறது —ஏதோ ஆயிரத்துக்கு மேலே போனால் மிக அதிகம் —என்று சொல்லக்கூடும், கம்யூனிஸ்டுகள், அக்கிரமத்துக்கு ஏன், பக்கபலமாக வேண்டும்? —என்பதுதான் நமது கேள்வி.

நாங்கள் என்ன பத்துப்பேரா, இருபது பேரா, என்பதற்காகச் சட்டமன்றத்தையே விட்டுவிட்டுப் போய்விடவில்லை. சர்க்காரைத் திருத்தவும், தவறு செய்யாமல் தடுக்கவுமே, இவர்களிருக்கிறார்கள் எதிர்க்கட்சியில். எனினும், ஒத்து ஊதப் போவானேன!!

### நாம் செய்வது தவறு தான்—

இதனை, உணராமலில்லை, காமராசருடைய சகாக்கள்.

### தி. மு. க. சொல்வது நியாயம்தான்—

இதனையும், அறியாமலில்லை, காங்கிரஸ்காரர்கள்

எனினும், இவர்கள் சொல்வதா நாம் கேட்பதா!!- என்கிற வீம்புக்காகவே போயிருக்கிறார்கள்.

புதிய அரண்மனையினை-$5\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கொட்டி வாங்கப்பட்டதாம்; மேலே $1\frac{1}{2}$லட்சம், செலவழிலப்பட்டிருக்கிறதாம்--ஒடிப்போய், புதிய புதிய ஏற்பாடுகளையெலாம் செய்து, சட்ட சபையைக் கூட்டியிருக்கிறார்கள்.

போன இவர்களுக்கு, வரவேற்பு அளித்தனராம் உதகை மக்கள்! அதாவது, உதகை மக்கள் எங்களை எப்படி வரவேற்றிருக்கின்றனர் தெரியுமா, என்று நமக்கு உணர்த்துகிறார்களாம், இச்சேதியை விளம்பரப்படுத்துவதன் மூலம்!!

இந்த வரவேற்பு, உதகை மக்களின், பெருந்தனமைக்கு எடுத்துக் காட்டொழிய, அதனால் இவர்களுக்கென்ன புதிய மவுசு பிறந்துவிட்டது. அவர்களும் கண்டிக்கவில்லை என்று நமக்குக் காட்ட விரும்புகிறார்கள் போலும்! எப்படிக் கண்டிப்பர், உதகை மக்கள்! ஏன் கண்டிக்கவேண்டும், அவர்கள்!!

அப்படியும், இந்த அலங்கார புருடர்களின் தரிசனத்துக்காக, உதகையே திரண்டிருந்ததா எனின், இல்லை. இன்னும் சரியாகக் கூறவேண்டுமேயானால், எங்கே உதகை மக்களும் "இங்கே வாரதீர்! ஏன் செலவு செய்கிறீர் பொதுப்பணத்தை!!," என்று எதிர்க்கப்போகிறார்களோ என்று பயந்து, இந்த வரவேற்பை, உண்டுபண்ணியிருக்க வேண்டும் இவர்கள்.

அந்த உண்மைதான் விளங்குகிறது, இந்த வரவேற்பில்!!

இவர்கள் செய்கிற காரியம் நியாயமென்றால், ஒவ்வொரு ஊரிலும்; போகிற எம். எல். ஏ-க்களுக்கு, "புனிதரே! புண்யாத்மாவே! ஊட்டிக்குப் போய் ஒரு பத்து நாளில் ஊரைச் சீர்திருத்தும் திட்டம் கண்டுவரும் உமக்கு இதோ, எம் அன்புமாலை," என்று வழியனுப்பு உபசாரம் நடத்தி ...வேண்டும். ஒவ்வொ

வரும், அமைச்சர்களுக்கும், மெஜாரிடி எம். எல். ஏ.க்களிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும், "முனிசிபல் தேர்தல் தோல்வி" பிரிவுபசாரத்தைத்தான், வழங்கியிருக்கிறது! அந்த முத்தாரம் ஏந்தித்தான், போயிருக்கின்றனர் அமைச்சர்கள்!!

தோல்விச் சூட்டைத் தணித்துக் கொள்ள, உதவக்கூடியதாயிருக்கக்கூடும் அமைச்சர்களுக்கு. அன்பர் கலியாணசுந்தரத்துக்கும், எதிர்க்கட்சித் தலைவர் வி.கே. இராமசாமியாருக்கும், ஏன்! என்ன வந்தது!!

போனதும், காங்கிரஸ் அமைச்சர்கள், ஒரு காரியம் செய்திருக்கிறார்கள்.

தமிழ் நாடே, பண்பாடும், எனும் எண்ணம் போலும்! சட்டமன்றம் கூடிய "ஆரன்மூர் அரண்மனை"க்கு, "தமிழகம்" எனும் பெயரைச் சூட்டியிருக்கிறார்களாம்!!

இது, ஒரு கண்துடைப்பு— எனினும், ஒரு "டில்லி மகால்", "ஜீனத்பவன்," என்று பெயர் வைக்காமல், தமிழகம், என்று அழைக்க முன் வந்தனரே, அந்த வகையில், மகிழத்தான் வேண்டும்.

இந்த நற்புத்தி, 'தமிழ்நாடு' என்று பெயர்வை என்று கேட்டு வருகிறோமே நாமெல்லாம், அப்போது வந்திருந்தால், நாடு மெச்சும்! 'சென்னை' போய் 'தமிழகம்' தெரியும் உலகுக்கு!!

கூடாது — முடியாது — பெயர் மாற்ற மாட்டோம்—என்ன இருக்கிறது பெயரில்—நீங்கள் சொல்லி நாங்கள் கேட்பதா — நேருவுக்குப் கோபம் வரும் என்றார்கள், அமைச்சர்கள்.

பெயர் மாற்றமே, பிடிக்காதவர்கள் போலும் இவர்கள் என எண்ணினோம்.

ஆரன்மூர் அரண்மனைக்கு 'தமிழகம்' எனும் திருநாமம் தந்திருக்கிறார்கள்! எனவே, பெயர் மாற்றம் பிடிக்காதவர்களல்ல என்பது தெளிவாக விளங்குகிறது!!

பிறகு ஏன், அரண்மனைக்குத் தமிழகம் எனும் பெயர் சூட்டிய இவர்களுக்கு, தமிழ்நாடு எனும் பெயர்வைக்க மனம்வரவில்லை.

'தமிழகம்' எனும் பெயர் சூட்டுவதன் மூலம், தங்கள் செய்த தவறினை, உதைக்குவந்தது கூடாது எனும் தி. மு. க.வின் பிரச்சாரத்தினை, மூடுகிறார்களாம்! முனைந்து செய்திருக்கிறார்கள்!!

இப்படி அவர்கள் முயற்சிப்பது ஏன்? தாங்கள் செய்தது தவறு எனத் தெரிகிறது. அதைச் சுட்டிக்காட்டிற்றே, தி. மு. க. ஏன் கேட்கவில்லை, என மக்கள் கேட்பரே, என்ற பயம் வருகிறது. எனவே, இப்படி ஒரு திரைபோட முயலுகிறார்கள்.

ஆயிரம் திரை போடினும், அறிந்துகொள்ளும் கட்டத்தில் தானிருக்கிறது, தமிழகம்! அங்காடிக் கடை, சந்துமுனை, தெருத் திண்ணை—எங்கும், 'உதவாக்கரை ஒரு கேடா?' எனும் ஒலி எழாமலில்லை!!

காங்கிரசார் மட்டுமல்ல, அவர்களுக்கு ஒத்தூதப்போன எதிர்க்கட்சியினரும், ஒருநாளைக்கு மக்கள் மன்றத்துக்குப் பதில் சொல்லித் தானாக வேண்டும்.

அப்போது, மக்கள் வழங்குவர் தீர்ப்பு! இப்போதும் மக்கள் நல்ல தீர்ப்பு வழங்காமற் போகார்-இது உறுதி!!

# வந்தார்! சென்றார்!!

வந்தார், கடந்தமுறை! தந்தார் சுடுசொற்களை!!

வந்தார், இந்தமுறை! முகாரி பாடினார், கடற்கரையில்!!

கடந்த முறை அவருடைய வருகையை முன்னிட்டு, ஒரு கருப்புக்கொடி கூடக் கண்ணிற்படாமல் செய்யவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார் காமராஜர்.

இம்முறை, அவர் தடுத்தாலும் முடியாத அளவுக்கு, ஏடுகள் எல்லாம், "யார் தி. மு. க." என்பதை, நேரு கண்ணில் படும்படி செய்துவிட்டன.

அடித்தனர்! உதைத்தனர்! துவைத்தனர்! பிளந்தனர் தலைகளை! தலைவர்களைத் தள்ளினர் சிறையில்! பேரூர் சிற்றூர்களிலுள்ள தோழர்களையெல்லாம் பிடித்துப் பூட்டினர்!— இது கடந்தமுறை, நேரு வந்தபோது.

இம்முறையோ, அடி வாங்கியவர்களில் பலர், கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள்! சிறையில் தள்ளப்பட்ட தலைவர்களின், சீரிய பாதையில் நடக்கும், 45 தோழர்கள், நகரத் தந்தைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்!! தழும்புகளைத் தடவிக்கொண்டே, நாளைக்கு நகராட்சியை நடத்தும் நிலையிலிருக்கிறார்கள்.

காட்டுமிராண்டிகள்! — என்றார் நேரு, முன்பு.

அந்தக் காட்டுமிராண்டிகளைக் கண்டு மிரளுகிறார் இப்போது.

கடுஞ்சொல் உதிரும்! கழகத்தைப் பற்றி, இலைமறைகாயாக இரண்டுவார்த்தையாவது தாக்கிப் பேசாவிட்டால் இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் விடமாட்டார்கள் நேருவை; இங்கே தமிழ்நாடு காங்கிரஸ் அவரை அழைப்பதே இதற்குத்தான்.

ஆனால், இம்முறை, நேரு தங்களைத் தாக்காமல் விட்டால் போதும், என்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் இருக்க நேர்ந்திருக்கிறது.

கடந்த ஆண்டு வந்தார்! அப்போது நகராட்சியில் நாம் இருவர்தான்!

இப்போது வந்தார்! அதே காட்சியைக் காட்டி, அவரிடம் 'சபாஷ்' பெற நினைத்தார் காமராசர்.— நினைத்தது நடக்கவில்லை. இப்போது நாம் 45 பேர்!!

நினைத்தபடி வார்த்தைகளை அள்ளி வீசாமல், கழகத்தைப் பற்றிச் சென்னைக்கடற்கரையில், எதுவுமே பேசாமல் சென்றுவிட்டார். வழக்கம்போல வரும் தேசிய ஐக்கியம், இந்தியா ஒன்றாயிருக்கவேண்டிய அவசியம், இதுபற்றி ஒரு வார்த்தையும் வரவில்லை அவரிடமிருந்து.

ஒருவேளை, நாம் '45 பேர்' வராமலிருந்திருந்தால், 'அவைகளைப்பற்றிப் பேசியிருக்கக் கூடும். சென்னைமாநகரின் சக்தியினைத் தெரிந்துகொண்டதால், காரமில்லை; பாரமில்லை. வந்தார்! போனார்!! ★

# நாமல்ல-புள்ளிவிவரமே கூறுகிறது

இந்திய உபகண்டம் தன்னுரிமை பெற்ற பின்னர், மத்திய அரசினரின் நடவடிக்கைகளையும், போக்கையும் கண்ட பிறகு, "திராவிட நாடு" பெறவேண்டும் எனும் எண்ணம், நமக்கெல்லாம், முன்னிலும் நன்கு வலுப்பெற்று, யாராலும் மறுத்தழிக்க முடியாதவாறு உறுதி பெற்றுவிட்டது.

இன்று மத்திய அரசு முக்கியமான பல அதிகாரங்களைத் தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளதுபோல, முக்கியமற்ற மிகமிகச் சாதாரணமான அதிகாரங்களையும் கூட மாநில அரசுகட்குக் கொடுக்காமல், அவ்வரசுகளை "ஊராட்சி மன்றங்களின்" நிலையிலேயே வைத்துள்ளது. இச்செயல் வேதனை தரும் ஒன்றாகும். சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் காணலாம்:

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த அம்பை வட்டத்தில், கடனா நதி என்ற ஒரு ஆற்றின் குறுக்கே ரூ. 80 இலட்சம் செலவில் ஒரு சிறு அணை கட்ட நம் மாநில அரசின் திட்டங்களெல்லாம் முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் திட்டத்தின் செயல் துவங்கவில்லை. காரணம் என்னவென்றால், "இத்திட்டம் இந்திய அரசினரின் ஒப்புதலை எதிர்பார்த்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினரின் ஒப்புதல் கிடைத்ததும் மேற்கண்ட திட்டம் விரைவில் முடிக்கப்படும்" என, இரண்டு திங்களுக்கு முன் சட்டமன்றத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கக்கன் அறிவித்துள்ளார்கள்.

80 இலட்சம்செலவு மத்திய அரசினரின் செலவினத்தில் ஒருகடுகு அளவினதேயாகும். இதைக்கூட மத்திய அரசினரின் அனுமதியை எதிர்பார்த்துச் செய்யவேண்டுமென்றால், இங்கு ஒரு அரசும் அமைச்சர் பெருமக்களும் ஏனோ தெரியவில்லை? மத்திய அரசு, சென்னையில் தன் பிரதிநிதியாக ஒரு ஏஜண்டை நியமித்திருக்கலாமே.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வேறொரு மாநிலத்தின் முதன் மந்திரி மனம் மிக நொந்து கூறியிருப்பதையும் பாருங்கள்:

"நாம் (மாநில அரசுகள்) குடியேற்ற நாட்டின் நிலையில்தான் இருக்கின்றோம். உண்மை விடுதலை இன்னும் இல்லை" என அசாம் முதன் மந்திரியாயிருந்தவரும், இன்றைய கவர்னருமான விஷ்ணுராம் மேதி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இக்கூற்றிலிருந்து நாம் மத்திய அரசின் போக்கினைத் தெரிந்து கொள்ள முடியும்.

பேரறிஞனும், சிறந்த அரசியல் நிபுணனுமான சாக்ரடீஸ் கூறினார்:- ஒரு நாட்டின் எல்லையை (அதிகாரத்தை) விரிவாக்கும் பொழுது அதனால் அந்த நாட்டு அரசுக்குத் துன்பம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்." என்று.

**தென்னவன்**

இன்று மத்திய அரசு, ஒவ்வொரு மாநிலங்களிலும் தனது அதிகாரத்தை வலுக்கட்டாயமாகத் திணித்து, மாநிலங்களிலுள்ள முக்கியமான வருவாய்த் துறைகளிலிருந்து வரியை வசூலித்துக் கொள்ளுகின்றது. ஆதலால் மாநில அரசினர் வருவாய்க்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றனர். மாநில அரசுகட்குப்பேரார்வம் இருக்கின்றது-- தங்கள் மாநிலங்களில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென. ஆனால் அவர்களிடம் வக்கில்லை.

தமிழகப் பழமொழி ஒன்று உண்டல்லவா! "சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்" என்று. அதுபோலத் தாங்கள் நிறைவேற்ற எண்ணித் தீட்டிய திட்டங்கட்கு, திட்டக்குழுவும் மத்திய அரசும் உதவியளிக்காததால், எவ்வளவு பேரார்வத்துடன் திட்டமிட்டனரோ, அதே உச்ச நிலையில், மத்திய அரசினரின் உதவி கிடைக்காததால் சோர்வினைப் பெற்றுச் சோர்ந்திருக்கின்றனர்.

மாநிலங்களிலிருந்து கொள்ளை கொள்ளையாய் வரிகளைப் பெற்றுக் கொண்ட மத்திய அரசினருக்கு உரிய கவலை என்னவென்றால், மிகப் பரந்த இந்திய துணைக் கண்டத்தில், எங்கெங்கு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவது என்பதில் குழப்பம் ஏற்படுகின்றது. அவ்வளவு தூரம் சமாளிக்க முடியாத அளவு, சிக்கல்கள் தோன்றிவிடுகின்றன. இறுதியில், இனம் பார்த்து இடம் பார்த்துச் செலவு செய்து விடுகின்றனர்.

இப்பொழுதுதான் அரசியல் அறிஞன் சாக்ரடீஸின் தத்துவம்- அரசியல் அறிவு பயன்படும். மத்திய அரசு தன் அதிகார வரம்பைக் குறைத்துக்கொண்டிருந்தால், இத்தகைய சிக்கல்கள் ஏற்பட்டிருக்காது. அதோடுகூட நாட்டின் நாலுபக்கங்களிலிருந்தும் வந்த தொகையை ஒருசில குறிப்பிட்ட இடங்களில் செலவுசெய்து மிகப் பெரிய திட்டங்களை நிறைவேற்றி அப்பகுதியில் மாத்திரம் பொருளாதாரப் பெருக்கத்தை-- வருவாய் உயர்வை ஏற்படுத்தி, நாட்டின், ஏனைய பகுதிகளில் தவ றுமையை உண்டாக்கும், தவ

ருன பொருளாதாரப் போக்கும் உண்டாகியிருக்காது. அதேநேரம் மாநில அரசுகள் தனது பகுதியில் உள்ள வருவாயைப் பெற்று, தங்கட்குரிய திட்டங்களைத் தாங்களே சிந்தித்துத் தீட்டி நிறைவேற்றிக்கொள்ளும்.

இதை இன்னொருமாநில முதன் மந்திரி கூறுவதன் மூலம் பாருங்கள். ஆனால் இவர் நம் மாநிலத்தவர் அல்ல.

"மத்திய சர்க்காரிடத்திலே நாம் அதிகமாகக் கையேந்தி நிற்க வேண்டியுளது. அப்படி நாம் கையேந்தி நிற்கும் நேரத்தில் நமக்குப் போதிய அளவு கிடைக்குமா? எப்போது கிடைக்கும்? என்பதையும் உறுதியோடு சொல்ல முடியாமல் இருக்கின்றது. ஆகவே மாநில அரசின் நிதி நிலைமை அறிக்கையை ஆக்குவதில் இடர்கள் இருக்கின்றன" என மேற்கு வங்க முதன் மந்திரி பி. சி. ராய் அவர்கள் கூறுகின்றார்.

இவ்வாறு மத்திய அரசைப் பற்றிக் கூற நம் அமைச்சர்கட்குத் துணிவு கிடையாது. ஆகையால் தான், நாம் கூறிக் கண்டிக்கின்றோம். நம் மாநிலத்திற்குரிய திட்டங்களை நாமே நிறைவேற்றிக் கொள்ள நாம் "திராவிட நாடு திராவிடருக்கே" என்று கூறுகின்றோம்!

இந்திய அரசு நம்மிடம் இருந்து பிரித்துக்கொண்டுபோகும் பணத்தைச் சரியான முறைப்படி நமக்குப் பங்கிட்டுத் தருவதில்லை. இந்தியாவின் மக்கள் தொகையில் நாம்—திராவிடப் பகுதியில் உள்ளவர்கள் — 100க்கு 25 பேர். ஆனால் மத்திய அரசு நமக்குப் பிரித்துக்கொடுத்த பணம் 100க்கு 11 சதவிகிதம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் விவசாய முன்னேற்றத் திட்டம் என்ற அடிப்படையில், தீட்டப்பட்டது. அதற்காக இந்திய அரசு அதிகமான பணத்தைச் செலவிட்டது எங்கே? பாருங்கள் புள்ளி விவரத்தை:-

| | |
|---|---|
| துங்கபத்திரா | 25 கோடி |
| கீழ் பவானி | 9·60 ,, |
| மாலம்புழா | 5 கோடி |
| ஆரணியாறு | 1 ,, |
| வாலயாறு | 1 ,, |
| மொத்தம் | 41·60 கோடி |

வடநாட்டிற்கு:-

| | |
|---|---|
| பாக்ரா அணைக்கட்டு | 170 கோடி |
| தாமோதர் பள்ளத்தாக்கு | 110 ,, |
| ஹிராகுட் | 71 ,, |
| ரிகண்ட் | 45 ,, |
| கோசி | 45 ,, |
| கொய்னு | 43 ,, |
| மொத்தம் | 484 கோடி |

தென்னகத்திற்குச் செலவிட்ட 41 கோடி எங்கே? வடநாட்டிற்குச் செலவிட்ட 484 கோடி எங்கே? மலைக்கும் மடுவினுக்குமுள்ள வேறுபாடல்லவா இருக்கின்றது! இதைக் கண்ணுற்றவர் யாராவது நெஞ்சில் கைவைத்துக் கூறுவார்களா — இந்திய அரசுடன் இணைந்து இருக்கவேண்டுமென்று. இதைக் கண்டவர் தம் நெஞ்சம் கொதிக்காதா? பேசுவார்களா? ஏக இந்தியா என.

சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். அது கனரகத் தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்கெனப் போடப்பட்ட திட்டமாகும்,

துர்காபூர் (வங்காளம்) பிலாய் (ம. பிரதேசம்) ரூர்கேலா போன்ற இடங்களில் மூன்று பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்கான செலவு ஏறத்தாழ 400-கோடிக்கு மேல். ஆசியாவிலேயே பெரிய உரத் தொழிற்சாலை சிந்திரியில்—இட்டத்தட்ட 100-கோடிக்குமேல். இந்தியாவிற்கே பெனிசிலின் மருந்துதரும்பெரிய தொழிற்சாலை பிம்பிரியில். இது தவிர கண்ணாடித் தொழிற்சாலைகள் வடக்கில்.

ஆனால் தென்னாட்டில் ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள்: பெங்களூரில் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை, டெலிபோன் தொழிற்சாலை, இருந்ததை விரிவாக்கிய பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, (10-கோடி மூலதனம்) இவ்வளவுதான். இந்த மூன்றிற்கும் போடப்பட்டுள்ள மூலதனம் மொத்தம் 100-கோடி, தேறுமோ என்னவோ? நெய்வேலி நிலக்கரித் திட்டம் இன்னும் தொடக்க நிலையில்தான் உள்ளது.

இதுதவிர போக்குவரத்து வசதியைப் பாருங்கள். முழு இந்தியாவிற்கும்:-

| | |
|---|---|
| இரயில்வே முன்னேற்றத்திற்கு | 900 கோடி |
| சாலை, சாலைப்போக்குவரத்திற்கு | 266 ,, |
| கப்பல் கட்டுவதற்கு | 100 ,, |
| விமானப் போக்குவரத்திற்கு | 43 ,, |
| செய்தி ஒலி பரப்பிற்கு | 76 ,, |
| மொத்தம் | 1385 ,, |

இதில் தெனகத்திற்கு:-

| | |
|---|---|
| சென்னைக்கு | 8·07½ கோடி |
| ஆந்திரம் | 5·46¾ ,, |
| கேரளம் | 3·17¼ ,, |
| கன்னடம் | 4·75 ,, |
| | 21·46½ ,, |

மொத்தத் தொகை ரூ. 1385-கோடி. நமக்குக் கிடைத்திருப்பது 21½-கோடி! ஆனால் நாம், இந்தியாவின் மக்கள் தொகையில் "நான்கில் ஒருபங்கு" இதை யாரும் மறக்கவேண்டாம்.

வட இந்தியாவில் புதிதாக 842 மைல்களுக்கு, இரண்டாவது திட்டத்தில் இரயில் பாதைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் தென்னகத்திற்கு ஒருமைலுக்குக் கூடப் புதிதாய் இருப்புப் பாதை கிடையாது.

இதோ விவரம்:-

| | | |
|---|---|---|
| கிழக்கு இருப்புப்பாதை | | 44 மைல்கள் |
| தென்கிழக்கு | ,, | 467 ,, |
| மத்திய | ,, | 175 ,, |
| வடக்கு | ,, | 100 ,, |
| வடகிழக்கு | ,, | 55 ,, |
| மொத்தம் | | 841 ,, |

தென் இந்திய இருப்புப் பாதைக்கு 0-தான். ஆனால் சென்னை அரசினர் மட்டும் 13-திட்டங்கள் அனுப்பினர்—புதிய இரயில் பாதை போட. புதிதாகப் போடப்பட்ட இரயில்பாதை 841 மைல். ஆனால் பதின்மூன்று திட்டங்கள் கொடுக்கப்பட்ட நமக்குக் கிடைத்த பலன் 0- (பூஜ்யம்) இது மட்டும்தானா?

ஆவடியில் உள்ள இராணுவக் கருவித் தொழிற்சாலையை மூடுவிழாச் செய்ய நினைக்கின்றனர் மத்திய அரசினர். உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தலாம் என வல்லுநர் குழுவே கூறியது. இன்னும் ஏற்படவில்லை அத்தொழிற்சாலை. பம்பாய் அதைப் பறித்துக் கொண்டுபோக எண்ணுகின்றது.

'சேலத்தில் அலுமினிய தாது

வும் (பாக்ஸைட்) இரும்புத் தாதுவும் கிடைக்கின்றன. அதைக் கொண்டு, உருக்காலையும், அலுமினிய ஆலையும் ஏற்படுத்துங்கள்'' என வேண்டிய மட்டும் கெஞ்சிக் கேட்டாய்விட்டது— தமிழகத்தவரால். ஏற்படுத்தினரா? இன்று வரை சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜி. டி. நாயுடு அவர்களை அறியாதார் யாரும் இருக்க முடியாது. உலகமே அறியும் அவரை! ஆனால்! அந்த அறிஞருக்கு இந்திய அரசு, ஆதரவு அளிக்கவில்லை. அவரது தொழிற்றிறத்தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை இந்திய அரசு! ஏன்? அவர் ஒரு தென்னாட்டவர் என்பதுதானே காரணம்? இதை யாராவது — எந்தக் காங்கிரஸ்வாதியாவது மறுக்க முடியுமா? இங்கு காட்டிய ஆதாரங்கள் எண்ணத்தில் நின்றன. மறைந்தன எத்தனையோ உள்ளன. கூறுகின்றனர்—ஏக இந்தியாவாம். பாரத நாடாம். எங்கிருக்கின்றது ஒரே இந்தியாவிற்கான அடிப்படை? யார்தான் சகிப்பர் வடவரின் இம்மாதிரியான நயவஞ்சகத் திட்டங்களையும் — போக்கினையும்? உண்மையான தமிழனாக இருந்தால் அவன் நெஞ்சம் கொதிக்குமே?

இந்திய அரசு நல்ல ஒரு தகப்பனது நிலையில் இருக்கவேண்டும். ஒரு மகன் கண்ணில் வெண்ணெயையும், பிறிதொரு மகன் கண்ணில் சுண்ணத்தையும் வைக்கும் தீய தகப்பனைப்போல் — கேடு கெட்ட தகப்பனைப்போல் இருக்கும் இந்திய அரசுடன் நாம் எவ்வாறு இணைந்து வாழமுடியும்? வாழலாம் என்பது கோழையின் செயலல்லவா?

இந்நிலையில் நாம் திராவிடநாடு கேட்காமல் இருப்போமா? கேட்பது தவறா? கேட்கக் கூடாதா?

சிலர் "நீங்கள் (தி. மு. க-வினர்) மட்டும்தானே திராவிடநாடு கேட்கின்றீர்கள். ஏனைய ஆந்திரரும், கன்னடரும், கேரளத்தாரும் கேட்கின்றனரா?'' என்று கேட்கின்றனர்.

ஆம் அவர்களும் கேட்கின்றனர். அதற்கான நல்ல சூழ்நிலையும் தோன்றுகின்றது.

இதோ:-

1. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் மைசூரின் முதன் மந்திரியாயிருந்த அனுமந்தையா அவர்கள் டில்லியில் திட்டக்குழுவின் வளர்ச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டபின் டில்லியிலும், மைசூரிலும், மத்திய அரசின் போக்கினைக் கண்டித்தார். அதாவது:-

"புதியதாய் 841-மைல் (முதலில் காட்டியுள்ளது) நீளத்திற்கு இரயில் பாதை அமைக்கின்றனர். ஆனால் தென்னிந்தியாவில் ஒரு மைல் கூடப் போடவில்லை. இது மிகவும் கண்டிக்கவேண்டிய விஷயம்'' எனக் காரசாரமாகக் கண்டித்துப் பேசினார்.

2. ஆந்திர முதன் மந்திரி திரு. சஞ்சீவிரெட்டி அவர்கள், தம் மாநிலத்திலுள்ள சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கத்தை விரிவுபடுத்த மத்திய அரசிடம் 4-கோடி கடன் கேட்டார். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். அதைக் கண்ட திரு. ரெட்டி, "தொழில் வளம் பெருக, நிலக்கரி தேவை எனக் கூறும் அரசினர், பணம் இல்லையெனக் கூறிவிட்டனர். ஆகவே மத்திய அரசினரின் போக்கைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று கூறுகின்றார்.

(3) மதுரையில் கேரளக் கல்வி மந்திரி திரு. முண்டசேரி அவர்கள் பேசும்போது, "மீன் பிடித்துறையை வளப்படுத்த மத்திய அரசிடம் பணம் கேட்டிருந்தோம். அதுபோல் மத்திய பிரதேசமும் கேட்டது. கேரளாவுக்கு 80-இலட்சமும், மத்திய பிரதேசத்திற்கு ஒரு கோடியும், இந்திய அரசு கொடுத்தது. ஆனால் கேரளா கடற்றுறை உள்ளநாடு. ம. பி. கடற்றுறையே இல்லாத நாடு. எனினும் ம. பி-க்குத்தான் அதிகப் பணம் கொடுத்தது—மத்திய அரசு. இது போன்ற அனுபவம் சென்னைக்கும் ஏற்பட்டிருக்கும் என எண்ணுகின்றேன்.

ஆகவே இனித் தென் மாநிலங்களின் வளர்ச்சிக்கு நாம் எல்லோரும் (கேரளம், தமிழ், கன்னடம், ஆந்திரம்) ஒன்றுகூடி மத்திய அரசிடம்சண்டைபோட்டுப் பணம் பெறவேண்டும்—அப்போதுதான் நாம் முன்னேற முடியும்'' என்று கூறிக் கண்டித்தார். அண்மையில், பட்ஜெட் கூட்டத்தில் கேரள நிதி அமைச்சரும் மத்திய அரசின் போக்கைக் கண்டித்தார்.

(4) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தென்னிந்திய வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை முற்றிலும் போதாது. நாட்டின் பொருளாதார வளத்திற்குத் தென்னாடு அளித்திருக்கும் பங்குக்கு இத்தொகை ஈடானதல்ல. இத்தகைய ஏற்றத்தாழ்வான நிலையைப் போக்குவதற்கு, மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்'' என, 22-9-58ல் மைசூர், சென்னை, ஆந்திர, கேரளா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 14 வணிகக் கழகங்களின் பிரதிநிதிகளின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றிக் கண்டித்திருக்கின்றனர்.

(5) "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நிதி ஒதுக்கியதில் தென்னாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தியிருக்கின்றது, மத்திய அரசு'' எனக் கண்டித்தார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. முகம்மது இமாம் அவர்கள்.

இக் கூற்றுக்களிலிருந்து நாம் கோரும் "திராவிட நாடு'' கோரிக்கையின் வளர்ச்சி தமிழகம் தவிர, ஏனைய பகுதிகளிலும் பரவி வருகின்றது என்பதை தெள்ளத் தெளிவாக, உள்ளங்கை நெல்லிக் கனியென உணர முடியும்.

இந்நிலையினைக் கண்டபின்னர் சிலர், திராவிடம் தனியாகப் பிரிந்தால், செழிப்பாக வாழமுடியாது. பாதுகாப்புடன் பயமின்றித் திகழ முடியாது என்றெல்லாம், பொய் வாதம் பேசுகின்றனர். அவர்கட்கு நாம் கூறுவோம்:-

அண்மையில் உரிமைபெற்ற மலேயா, கானா போன்ற, சின்னஞ் சிறிய நாடுகள் ஐம்பதுக்கும் மேல் உள்ளனவே! அவையெல்லாம் அழிந்தா போய்விட்டன? அந்நாடுகளில், நம்மிடம் இருக்கும் வளங்களைப்போல் வளமே கிடையாதே! சுவிட்சர்லாந்து, கடிகாரத் தொழிலை நம்பி வாழ்வதுபோல்— மலேயா ரப்பரை நம்பி வாழ்வதுபோல்—ஒரு பொருளை மாத்திரம் தன் பொருளாதாரத்திற்காகக் கொண்டு வாழுகின்றனவே அந்நாடுகள்— அவற்றைவிட, மூன்று பக்கமும் கடலும், ஒரு பக்கம் மலையையும், அரணாகக் கொண்டு, வெளிநாட்டுச் செலாவணிக்குத் தேயிலையையும் காபியையும், மிளகு போன்ற வாசனைத் திரவியங்களையும், அணுசக்தித் தாதுப் பொருள்களையும் பெற்றுள்ள நாம் துணிமையும்,

நூலையும், தோல், கடலை போன்றவற்றையும்வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தமிழகத்தைப் பெற்றுள்ள நாம்—கோலாரில் தங்கத்தையும், நெய்வேலியில் நிலக்கரியையும், சேலத்தில் இரும்பு, அலுமினியம், உரேனியம் போன்ற தாதுக்களையும் இன்னும் பல வசதிகளையும் பெற்றுள்ள நாம் வாழமுடியாதா?

மேலும் ஒரு நாடு வாழ அது நில அளவால் பெரிதாய் இருந்து பயனில்லை. மக்களது அறிவாலும் உழைப்பாலும் தான் அது சிறந்து தோன்றும் எனக் கூறியுள்ளார் ஒரு உலக அறிஞர்.

"ஒரு நாடு 2000 மைல் நீளமுள்ளதாக இருக்கலாம், அல்லது 200 மைல் நீளமுள்ளதாக இருக்கலாம். அந்த நாடு பெரிதென்பது அதனுடை அகல நீளத்தைப் பொறுத்தது இல்லை. அந்த நாட்டு மக்களின் தன்மையைப் பொறுத்தே அதனுடைய முக்கியத்துவம் இருக்கின்றது" என்றார் இரண்டாண்டுகட்கு முன், ஹேக் நகரில் பேசிய இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள்.

இக்கூற்றிலிருந்து நாடு வாழ, நீள அகலம் தேவையில்லை. அறிவுத் திறன் இருந்தால் போதும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே நாம்-தன்னுரிமை பெற்றுப் பத்தாண்டுகட்கு மேலாகியும் வறுமையையும், பசிக் கொடுமையையும்-வரிக் கொடுமையையும்- அன்றி வேறொரு நன்மையையும் பெறாத நாம்-வளமுள்ள நமது நாட்டை, செல்வம் கொழிக்கும் சிங்காரச் சோலையாக மாற்ற-இல்லாமையை இல்லையெனும்படி செய்ய, மாண்ட பெருமையை மீண்டும் பெற-அறிவுக் கூர்மையுடனும், ஆண்மைத் திறமுடனும் விளங்கி எந்நாட்டவருக்கும் வழி காட்டியாய் நாம் திகழ வழி வகுக்கும், "திராவிட நாடு திராவிடர்க்கே" என்ற இன்ப கீதத்தை-ஒரே குரலாய் ஒலித்துக் காட்டி, நம் இலட்சியக் கோட்டையை அடைய, இப்பொழுது கிட்டியிருக்கும் நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, ஒற்றுமையுடன் போராடுவோமாக! வாழ்க நம் கொள்கை! வளர்க நம் இலட்சியம்!!

# தீந்தமிழா திருந்து!

—[தேசியமணிகண்ணன்]—

அன்புள்ள பொன்முடி

உன் மடல் கண்டேன். மகிழ்வதற்கு மாறாக மனவேதனைதான் ஏற்பட்டது. ஈழத்து மக்களின் இன்னலையும்; தென்—ஆப்பிரிக்க மக்களின் தேங்கிக் கிடக்கும் துயரையும், மலேயா மக்களின் மனப் பூசலையும் மடல் மூலம் கண்டு மாறாத் துயரடைந்தவன் நீ என்பது மட்டுமல்ல, நம்மைச் சார்ந்தவர்கள் கூடத்தான் என்பதை நான் நன்கறிவேன்.

சோறுவது செழுமையாக வாழ் இருனேன என எண்ணியதாகக்குறிப்பிட்டிருந்தாய். உண்மை அதுவல்ல உயர்தோழா! உணர்கின்றேன். ஆனால் உதவ முடியவில்லையே என வேதனையோடு எழுதி இருந்தாய். நீயும், நானும், நம் கழகமும் உணர்ந்தால் போதாது. நம் "திருநாடு" உணரவேண்டும். அப்பொழுதுதான் ஊட்டிக்கு உல்லாசமாக உலாவச்செல்லும் உத்தமர்களைத் திருத்த முடியும். $9\frac{1}{2}$ கோடி மக்களும் உணர்ச்சி பெற்று விழித்தெழுந்தால் ஒரு விநாடி. திராவிட நாடு கிடைத்துவிடும்.

இங்கு உணர்ச்சி இருக்கிறது. பரவுகிறது. காலம் கனிகிறது. எனக் காரணங் காட்டுகிறாய், ஆட்சி நடத்துவோரும் அப்பழுக்கற்ற தமிழர்கள் என்றாய். இருக்கலாம் புறத்தூய்மை. அகத்தூய்மை உள்ளவர்களானால் என்றோ "மதராஸ்" "தமிழ்நாடாகி" இருக்கும். அயல்மொழியாம் "ஆகாஷ்வாணி" அழிக்கப்பட்டு வண்டமிழாம் "வானொலி" வலம் வந்திருக்கும். தானென்ற அகம்பாவத்துடன் விளங்கும் "டால்மியாபுரம்" அழிக்கப்பட்டுக் கன்னித் தமிழ்ச் சொல்லாம் "கல்லக்குடி"யாகி இருக்கும். இலங்கைத்தமிழன் "காலனி" யாக்கப்பட்டிருக்கமாட்டான். இதிலிருந்து தெரிகிறது தோழா! இருந்து ஆள எண்ணம் கொண்டவர்கள் இன உணர்ச்சியற்ற தமிழர்கள் என்பது.

அதுமட்டுமல்ல ஆத்திக அன்பர்கள் கூறுவதைப் போன்று அட்டதிக்குப்பாலர்களாம் அமைச்சர்களுக்கு அருந்தளபதியாய் (பிரதமர்) அமர்ந்திருப்பவர் (அவரை என்னைவிட அதிகம் அறிந்திருப்பாய்)

"பொருதடக்கை வாளெங்கே
மணிமார்பெங்கே
போர்முகத்திலெவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே என்று
பயிரவியை கேட்பாளை காண்மின்
காண்மின்."

என்று கன்னித்தமிழ்ப் பெண்ணின்வீரமுரைக்கும் "கலிங்கத்துப் பரணியை" கற்காத, கற்ற காரிகையின் கரங்களைக் கைப்பற்றாத காமராசர் என்பதை எண்ணும்போது கவலை மட்டுமல்ல, கண்ணீரும் பெருக்கெடுத்தோடுகிறது.
என் செய்வது,

"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்,
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென்
ஆயுளென......"

மயங்கி வீழ்ந்து மடிந்த பாண்டியன்.

இடையிலே புகுந்தவர்களால், இனை செய்பவர்களால் ஆவடி சோஷலிஸ்டுகளால், அமிர்தசரஸ் ஆபத்பாந்தவர்களால், அபயங்கர் நகர் அகிம்சா மூர்த்திகளால் நாடாளும் நாசகாலர்களால் இனத்துரோகிகளாக்கப்பட்டு விட்டார்கள். நந்தமிழ் நாட்டுக்குழைக்க வேண்டும் என்ற நல்ல உணர்ச்சி கூட அவர்களுக்கு 'இல்லையே என வருந்தாதே. இருந்திருந்தால் எந்த மாநிலமும் செய்யாத அளவுக்கு இன்றிருந்து நாளை அழுகும் பொருள்மீது வரி விதித்தலை இந்த மாநிலம் செய்திருக்குமா எனக் கேட்டுவிடாதே. அது காலத்தின்கோலமல்ல, கடவுளின் சிலமல்ல, விதியின் விளையாட்டல்ல, வடநாட்டு ஆதிக்கத்தின் "சதி" தான் இன்று வண்டமிழர், காமராசர் போன்றோரின் "கதி"க்கு காரணம் என்பதை நலிவுற்ற நம் திருநாட்டவர்க்கு உரை.

அன்புள்ள,
**சேரன்.**

# தென்னவர் வாழவேண்டுமா?

எந்த மனிதனும் தன் உடலைப் பிற உடலிலே புகுத்தமுடியாது; அதுபோல் எந்த நாடும் பிற நாட்டின் அதிகாரத்தின் கீழ் வாழ முடியாது என்றார் மாஜினி. தமிழன் எவருக்கும் தாழான்-எவரையும் தாழ்த்தான் என்பது தமிழர் வாழ்வில் கண்ட வழிமுறை. அந்த முறைக்கு ஊறுவிளைவிக்கும் உலுத்தர்கள் உலாவும் நாடாகக் காட்சி அளிக்கிறது. சுயநலம் சூதாட்டம் ஆடுகிறது. பதவி பித்தர்கள் பகடை ஆடுகிறார்கள்.

ஒரு நாடு முன்னேற மக்கள் வாழ்க்கைவளம் பெற வேண்டும். வாழ்க்கை வளம் பெற நல்லாட்சி வேண்டும். நல்லாட்சி வேண்டுமெனின் அறிவுபடைத்த நேர்மை தவறா மக்கள் வேண்டும். அப்படிப்பட்ட மக்களை உருவாக்கும் பணியில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபாடு கொண்டுள்ளது. வடக்கை வளமாக்கி, வாழ்வளிக்கிறது; தெற்கைத் தேயவைத்துத் திண்டாடவைக்கிறது தில்லியரசு. அதில் ஓர் திருப்பம்காணத்தான் பாடுபடுகிறது தி. மு. க.

வடக்கே ஆலை அரசும்; தொழிற் கூடமாகவும், செய்து மக்களின் வருமானத்தை ஆண்டிற்கு ரூ. 600-ஆக்குகிறார்கள். ஜனநாயகரீதியில் ஆளும் அரசானால் அதேவிகிதப் படியாக அல்லவா தெற்கிற்கும் கிடைக்கச் செய்யவேண்டும். தென்னாட்டில் ஒருவருக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 300, ஏன் இந்தப் பாரபட்சம், வஞ்சனைச் செயல்—அநீதி.

39-கோடி மக்கள் வசிக்கும் இந்த நாட்டில் ஆளும் அரசு உலக பாங்கில் கடனாகப் பெற்ற தொகை ரூ. 83-கோடி. உலகத்திற்கே நாம்தான் கடனாளி என்ற பெருமையைப் பெற்றுள்ளோம். யார் வாழ, யார் கடனாளியாவது. 83-கோடி ரூபாய்க்குப் பொறுப்பு நேரு பண்டிதர்தான். ஆனாலும் அதை நாம்தான், தென்னாட்டவர் தான் பெரும் பங்கு செலுத்தியாக வேண்டும். பிறந்த குழந்தைமுதல் இறக்கும் கிழவன்வரை இந்த நாட்டில் கடனாளியாகும்.

சிந்தித்துப்பார்! நீயும் கடனாளியாம் நானும் கடனாளியாம், ஏன்?

செ. மொழியன்பன்

வடவர் வளம்பெற, அவர்கள் ஆண்டிற்கு 600-ரூபாய் வருமானம் பெற, நாம் 300-ரூபாய் பெற்றும் கடனாளியாவது. இந்தியாவின் பல பகுதிகளில் மக்கள் பெறும் வருமானமும் அந்த வருமானத்தை நம்பி வாழ்க்கை நடத்துவோரும், கீழ் பட்டியலை காண்.

| பகுதி | 100% வருமானம் பெருவோ | 100% நம்பி வாழ்பவர் |
|---|---|---|
| வடமேற்கு | 45-பேர் | 55-பேர் |
| வடக்கு | 42 ,, | 58 ,, |
| கிழக்கு | 37 ,, | 63 ,, |
| மத்தியபகுதி | 46 ,, | 57 ,, |
| தெற்கு | 31 ,, | 69 ,, |

ஏன் இந்த மாறுபாடு. சிந்தனை மூடநம்பிக்கையின் எதிரி என்றார் செகப்பிரியர். கடன்படுவது வருமானம் காரணமாக என்று கூறுவதற்கில்லை. பெரும்பாலான கடன்காரர்கள் செல்வர்களே எனலாம். அவர்கள் தம்மைச் செல்வர்களாகக் காட்டிக்கொண்டு சமுதாயத்தின் கண்முன் தன் மதிப்பைக் காக்க, எண்ணியே வருவாய்க்கு மேற்பட்ட செலவு செய்து கடன்படுகின்றனர். மக்கட் பண்பு இப்பகட்டால் அழிக்கப்படுவதால், இப்போலி அளவைப் பலரும் பெறப் பணத்தைக் கடன் வாங்கி, செயற்கை வாழ்வு வாழ்கின்றனர், அதன் காரணமாக அவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிற்க நேரிடுகிறது. இதைப்போல்தான் காங்கிரசு அரசும் பகட்டால் அழிகிறது.

கடனோடு காலையில் எழுவதைவிட, பட்டினியுடன் இரவில் படுப்பது நன்று, என்பதுபோல் கையில் காசு இல்லையேனும் கடன் இல்லாமல் இருப்பது நன்று. மலர் மணம்வீச மறுத்தாலும் நாற்றம் வீசாமல் இருத்தல் நன்று அல்லவா? ஆகவே வடவர்கள் வாழ நாம் கடனாளியாவதா? ஏ வீழ்ந்த திராவிடமே! வீறுகொண்டு எழு! ஏறுபோல் காளைகளே இன்னும் கடனாளியாகாதே! வெற்றி என்பது எண்ணத்தைப் பொறுத்துதான் இருக்கிறது என்றான், நெப்போலியன். வடவர் எதிர்ப்பு இன்னும் மேலும் ஓங்கட்டும். எதிர்ப்பு எங்கு உண்டோ அங்கு வெற்றி திண்ணம்.

ஆகவே நாடு நலம்பெற, கேடு நீங்க நம் உழைப்பை வடவர் உறுஞ்சாமல் இருக்க, நம் வாழ்வு உயரத் திராவிடம் காண்போம்.

உண்மைதான் உலகத்தின் அறிவுச் செல்வம்! உண்மையே மகிழ்ச்சியின் தாய்! உண்மைதான் முன்னேற்றத்தின் அடிப்படை. உண்மையைக் காண்பதுதான் நல்லவர்களின் பேராவல். உண்மையைத் தேடுவதுதான் மிகமிக உயர்ந்த செயல். அதனால் உண்மையைக் காண்கின்ற மனிதன் ஒளியை உண்டாக்குகின்றவனாகின்றான்.

# 'ஓரளவு' வெற்றி, 'அதிக' வெற்றி இன்று!

4-ம் பக்கத் தொடர்ச்சி

தி. மு. க. வென்றுவிட்டது!!-இதைச் சகலரும், எல்லா ஏடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

*

தினமணி தீட்டுகிறது — மித்திரன் சித்திரம் போடுகிறது—'இந்து' எழுதுகிறார் — மெயில் அறிவுரைதர ஓடிவருகிறது—இப்படி எல்லா ஏடுகளும் நான் முந்தி நீ முந்தி என்று, கருத்துரைகள் வழங்குகின்றன. காங்கிரசுக்கு ஒரு பக்கம் அறிவுரை! நமக்கு ஓரிடத்தில் தெளிவுரை!!-இப்படி எல்லோரும், ஏதாவது எழுதித் தீரவேண்டிய ஒரு கட்டம் ஏற்பட்டு விட்டது இன்று. எழுதுமா இந்த ஏடுகள், ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு! நம்மை ஒரு கட்சி என்று வது மதிப்பார்களா, ஒரு காலத்தில்!! உண்மையில்; இன்று நாம் கண்டுள்ள வெற்றியினைப்பற்றி, பல வாறுகக் கணக்கெடுப்போர் உள்ளார்கள். எங்கே எல்லா ஊர்களிலுமா தி. மு. க. கொடி நாட்டிவிட்டது என்று கேள்வி கேட்போர் இருக்கிறார்கள். உண்மை! சென்னையில்கூட நாம் முதல் கட்சியே ஒழிய, முழுவெற்றி கண்ட கட்சியல்ல! பல நகர சபைகளில் 'நாமும்' இருக்கின்றோமே ஒழிய, நகரசபைகள் இன்னும் நம்முடையதாகவில்லை!! இந்த உண்மையினை மறந்துவிட்டு, ஆகா, ஊகூ, வளர்ந்துவிட்டோம் இனி வளர்வதற்கே இடமில்லை என்று தப்புக் கணக்குப் போடும் நிலையிலில்லை, நாம். அதே சமயத்தில், மாற்றார் கேலி பேசியதுபோல, நாமும் நாட்டின் நன்மை தீமைகளை நிர்ணயிப்பதில் ஒருமுக்கிய இடம் பெற்று வருகிறோம்; இதனை, எதிர்காலம் அறியாதாரே மறுப்பர்; விவேகிகள், நிச்சயம் மதிப்பர். இப்படி ஒரு இடம்பெற, நாம் தாண்டி வந்திருக்கிற மேடுபள்ளங்கள், தப்பிப்பிழைத்திருக்கிற எரிமலைகள் ஏராளம்! ஏராளம்!! நாகை மணியும், மாயவரம் நடராசனும், பட்டுக்கோட்டை அழகிரியும், பல்புகழ் கொண்ட அவர்தம் தோழர்களும், கட்சி துவங்கிய காலத்தில் பட்டபாட்டினை இச்சமயத்தில் எண்ணுமல் இருக்கமுடியாது. இலட்சியத்தைதஎடுத்துச்சொல்லப் போனல், கூட்டம் கூடுவதே கடினம், அந்தக்காலம்! கூட்டம் நடந்தாலும், கல்லடி விழாது, தப்புவது அதைவிடக் கடினம்! ஊரார் கல்லடிக்குத் தப்பி வீடு வந்தாலும், உற்றார் உறவினர், தாய் தந்தையர் சொல்லடிக்குத் தப்பமுடியாது! போகிறான் பார்—புத்தியற்றவன்—கழகமாம் கட்சியாம்—புலிக்கு முன் எலி—என்றெல்லாம், வார்த்தைகளையே ஈட்டியாக்கி இருதயங்களைப் பிளந்ததுண்டு!! அந்த நாள் மாறி இன்று, அகில உலகமுமே வியக்கும் ஒரு கட்டம் உருவாகியிருப்பது, காலக்குறி மட்டுமல்ல, நாம் கடைப்பிடித்து வரும் கண்ணியமும் கடமை தவருப் பண்புமேயாகும். அடிக்கு அடி, நாம் கொடுத்தோமில்லை! ஏச்சுக்கு ஏச்சு, தி. மு. க. வழங்கியதில்லை! எரிச்சல் பாதையில் சென்றதில்லை! இலாபப் பாதையை நோக்கியதில்லை! கொடுமை இன்னொருத்தருக்கு தத்தம் செய்தோமில்லை! கொள்கையை விற்றோமில்லை! குச்சு வீடானாலும் கடமை செய்தோம் என்கிற மன நிம்மதியோடு, கீத்து வீடானாலும் மாத்துக் குறையாத மாணிக்கங்களாக, இருக்கின்றனர், நமது தோழர்கள்! பெற்றோம், இப்பெரும் பேறு, இந்தப் பத்தாண்டுக் காலத்தில்!! மமதையாளரும், மாசுமனம் கொண்டோருமே, இதனை மறுப்பர். உண்மை விரும்பிகள், உள்ளபடி, இதனை உணரவே செய்வர். "இந்தியன் எக்ஸ்பிரஸ்", காங்கிரஸ் ஏடு. அது, சென்னைத் தேர்தல் முடிந்ததும் தனிக் கட்டுரையொன்று போட்டிருக்கிறது. அது கூறுகிறது:

> "சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலில் மிகப்பெரிய கட்சியாக தி. மு. க. வந்திருப்பது, வரப்போகும் காலம் எப்படிப்பட்டது என்பதைக் காட்டுகிறது."

'எக்ஸ்பிரஸ்' எழுதுகிறது! வரப்போகும் காலத்தைக் கணிக்கிறதாம், இத்தேர்தல்!! என்ன பொருள் இதற்கு? 'எதிர்காலம் தி. மு. க. வுக்கே' என்கிறார் கட்டுரையாளர்! அதனையும், அழுத்தந் திருத்தமாக வரைகிறார் ஏட்டில்!!

> "பம்பாயில், எதிர்க்கட்சியினர்தான் நகராட்சி மன்றத்தைக் கைப்பற்றினார்கள். ஆனால், அவர்கள் இருமொழி நிலம் எனும் அடிப்படையில் போட்டியிட்டார்கள். தி. மு. க. அப்படிச் செய்யவில்லை."

என்று, நம்முடைய வெற்றிக்கு எது காரணம் என்பதை; அலசிக் காட்டுகிறார், அவர்:

**தரமான அமைப்பு.**
**மக்களின் மனதில் ஒரு இடம்.**
**குறையிலாத் தன்மை.**
**சட்டசபையில் நடந்துவரும்**
**அப்பழுக்கற்ற தன்மை,**

இவையே, வெற்றிக்குக் காரணம் என்கிறார்! 'எக்ஸ்பிரஸ்' ஏடு, சொல்கிறது, இதனை!! கண்ணீர்த்துளிகள், என்று 'விடுதலை' திட்டுகிறது. 'எக்ஸ்பிரஸ், அச்சடிக்கிறது, இவ்வாறு!!

# 'முழு' வெற்றியாக மாறவேண்டும் இது!!

"கல்கத்தாவில், விடாது, பாடுபடுகின்றனர் கம்யூனிஸ்டுகள். எனினும், இவ்வளவு வெற்றியைக் காணவில்லை, ஓட்டர்களிடம்."

இதுவும், கட்டுரையிலிருப்பதே! பம்பாய்—கல்கத்தா—சென்னை, இம்மூன்று நகரங்களில், காங்கிரசுக்கு சரியான அடிகொடுக்கும் ஆரம்பம், சென்னையில்தான் துவங்கியிருக்கிறது—அதுவும் தி. மு. க. மூலம் ஆரம்பமாகியிருக்கிறது, என்கிறார் கட்டுரையாளர்.

"படித்தவர்கள், காங்கிரசைவிட்டு விலகிப் போகிறார்கள்......"

"தி. மு. க-வின் வெற்றி, திடீரென ஏற்பட்டதல்ல"

"நகரத்தில் இன்று நடந்தது, வெளியூர்களிலும் நடக்கும்"

"அடுத்த பொதுத் தேர்தலில், காங்கிரசுக்கு அடுத்தபடியாக ஆட்சியில் அமரும் கட்சியாக வரக் கூடும்"

**"அமைப்பு ரீதியில் இயங்கும் கட்சிகளில், தி. மு. க-தான் முதல் கட்சி. அப்போதையப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தி உடனடி வெற்றி காணாமல், ஒரு ஒழுங்கோடு, காங்கிரசை எதிர்க்கும் நிலையிலுள்ள கட்சி இதுதான்."**

படிக்கத் துடிக்கிறது! கேட்க இனிக்கிறது! எரிச்சலைத் தவிர வேறெதுவும், அறியோம் இந்த ஏடுகளிலிருந்து, குறும்புகளையும், கோணல்மாணல் செய்திகளையும் தவிர, வேறேதும் பெற்றோமில்லை இவைகளிலிருந்து. அங்கேயிருந்து ஒலிக்கிறது இந்தக்கீதம்! ஆனால், நம் 'விடுதலை' இன்னும் ஏசல் படலத்தை விடவில்லை!! இந்த ஆனந்தமான நேரத்தில் அது ஏன்?—எனலாம் தோழர்கள். ஆயினும் மறந்திடல்தகாது நாம் இமயத்தையே புரட்டினும் "சேச்சே! இல்லையில்லை'!" என்று இழித்துரைப்போரும் நம்மவர்களாகயிருக்கிறார்கள் என்பதை. வெற்றிப் போதையில் பாதையினை மறந்திடும் பண்பு நமக்குத் தெரியாதது! பெறவேண்டியதில் ஒரு கட்டம் முடிவடைந்து வருகிறது என்றே நாம் எண்ணவேண்டும்!!

*

இத் தேர்தலுக்கு முன்பு, கழகத்தில் 15 எம். எல். ஏ.க்கள் இருந்தனர்—இப்போது பல ஊர்களில் கவுன்சிலர்கள் இருக்கின்றனர் — சென்னை மாநகரில் 45 பேருள்ளனர். இந்தப் புள்ளி விபரம், பூரிப்பைத்தரும்! அதேசமயத்தில், எத்தனையே புதிய கட்டம் அரும்பியிருக்கிறது என்பதனைக் கழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்திடல் வேண்டும்!!

கழகம், மக்களின் கூடமாக மலர்ந்து வருகிறது. மகத்தான மாற்றமே! அதே சமயம், மறந்துவிடக் கூடாது, சுமையும் ஏறுகிறதென்பதை!!

ஜனநாயக ரீதியில் தன்னை அமைத்துக்கொண்ட எந்தக் கட்சியும், பொறுப்பினை ஏற்க, தயாராக இருக்கவேண்டும். அந்தப் பொறுப்புக்கு, ஒவ்வொரு நாளும், நம்மவர்கள் தயாராகித்தகுதிக்குரியோராகும் கட்டம் இது.

கூரிருக்கவேண்டும், பல கட்டுமெத்தை வீடு வேண்டும், எடுபிடிகள் வேண்டும், அப்போதுதான் எம். எல். ஏ-யாகலாம், மந்திரியாகலாம், மேயராகலாம் என்று இருந்தது, அந்தக்காலம். காரில்லாவிடினும், கனிந்த இருதயம் இருப்போரெல்லாம் பதவிக்கு வரக்கூடிய காலம். பதவிகள், 'மவுசுக்கு' என்று இருந்த நிலை மாறி, 'தொண்டுக்கு' எனும், புதுயுகம் முகிழ்க்கிற காலம்.

புதுயுகத்தை தவறவிட்டனர்; காங்கிரஸ்காரர்கள்! பொறுப்பு, நம் கைக்கு வரும் காட்சி அரும்புகிறது!!

இன்று ஒரு சென்னை-நாளை நகரமெலாம் தி. மு. க ஆட்சிக் கூடங்கள் ஆகவேண்டும்-அது மட்டுமா? கிராமப் பஞ்சாயத்துக்கள், நாட்டிலுள்ள ஒவ்வொரு வீடுகள், எங்கும், கழகம், புகவேண்டும். அப்போதுதான், நமது விடுதலை இயக்கம் வெற்றி பெறமுடியும்! இப்போது கிடைத்த வெற்றியை, அதற்கு அடிகோல் கட்டமாக எண்ணவேண்டும் தோழர்கள். பயணம் பெரிது! அதில், ஒரு சாதாரணக் கட்டம், இது!!

இன்றில்லாவிடினும், நமக்குக் கிடைக்க வேண்டிய கட்டம்தான், இது.

மகிழ்வோரே! மறக்குல மரபினரே! தோழர்காள்! துந்துபி எழுப்பிடும் வீரர்காள்!—பொறுப்பு அதிகமாகிறது; பூரிப்புப் பெறும் வேளையில் இதனை மறந்திடாதீர்.

பொறுப்புடன், கடமையையும் நினைமின்! கழகத் தொண்டினை, முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக நடத்துமின்! அதன்றி, வேறெந்த, கற்கண்டைத் தாமுடியும் நம்மால்!!

வாழ்க தொண்டு! வருக திராவிடம்!!


# பொறுப்பு அதிகமாகிறது!

# உடன்பிறந்தே கொல்லும்!!

மகந்துகள், குருமார் என்போரின் இடமாயிற்று, சீக்கியர்தம் திரு இடமான குருத்துவாரம்! இதனைக்கூடாதெனக்கூறி, கொடி பிடித்தது, அகாலிதளம்-பெரியவர் தாராசிங்கின் கட்சி!!

இந்த வெற்றியினைப், பாராட்டிற்று, காங்கிரஸ் — இதற்குப் பிறகே, அகாலிதளம் ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக மாறிற்று— இது 25 ஆண்டுகளுக்கு முன்பு.

வீர மரபினராம் சீக்கியருக்கு' அன்றுமுதல் புதிய தலைவர் கிடைத்தார்! அவர்தான் படத்திலிருக்கும் தாராசிங்!! காங்கிரஸ் கட்சிக்குஉறுதுணையாக இருந்தார் உழைத்தார். போராடினார்.



ஆனால், ஊர்கெடுப்போரின் பீடமாகிறது காங்கிரஸ் எனக் கண்டதும், பதறினார். 'இந்து மதத்துக்கு'சாமரம் வீசுவது கண்டு பதைத்தார். எங்கே சீக்கியர்தம் உரிமைகள் பறிபோய்விடுமோவென அஞ்சி, அவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டினார். இதன் விளைவாகப், பல தடவை பல வழிகளில், காங்கிரசை எதிர்த்துப் போராட நேர்ந்தது. கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, தான் ஒதுங்கியில்லாமல், தானே முன்னின்று நடத்தினார். அப்போதெல்லாம் அவர் காட்டிய உறுதி, தளராத் தன்மை, அவருடைய உருவை ஒவ்வொரு சீக்கியர்தம் உள்ளத்திலும் செதுக்கியது.

இதுகண்ட காங்கிரசார், காளான்களைத் தேடிப் பிடிக்கலாயினர்! சீண்டு முடிந்துவிட்டு, சீக்கியர்தம் ஒற்றுமைக்கு, உலை வைக்க முனைந்தனர்!! எவரெவர் தமக்கு எடுபிடியாயினரோ அவர்களுக்கெல்லாம் ஏற்றமும் பதவிகளும் தந்து, அகாலிதளத் தலைவரை ஒடுக்குவதில் முனைந்தனர்.

எனினும், தாராசிங் காங்கிரசோடு கலந்துவிடும் மனம் பெறவில்லை! மாறாக, காங்கிரஸ்தான் அவருடன் பல ஒப்பந்தங்களுக்கு அடிபணிய நேர்ந்தது!! இடம் மாறாது, உறுதியின் மூலம் தன் எண்ணங்களைச் சாதித்துக்கொண்டார்.

ஒரு சமயம், காங்கிரசுக்கும் அகாலிதளத்துக்கும்கூட, ஒப்பந்தம் ஏற்பட்டது. எங்கே தாராசிங் தவறிவிடுவோரா-இரு கட்சியும் ஒன்றாகிவிடுமோ, என்று எண்ணப்பட்டது.

ஆனால், நிலைக்கவில்லை! காங்கிரஸ் தன் குணத்தைக்காட்டிற்று!! அகாலிதளத்தைச் சிதைத்து, அமிருதசரசில் ஒரு மாநாடு நடத்தவும் துணிவுகொண்டது.

மாஸ்டர் தாராசிங் வெகுண்டார் அதே நாளில், அங்கு ஒரு ஊர்வலம் ஏற்பாடு செய்தார். வெற்றி இவருக்கேஒழிய, காங்கிரசுக் இல்லை!

கியானி கர்தார்சிங்-என்பவர் ஒரு குழுவை, காங்கிரசுடன் சேர்க்க முயன்றார்.

தாராசிங்—பக்கம்தான் சீக்கியர் நின்றனர்.

காங்கிரசும், கர்தார் சிங்கும் கூடிக்கொண்டு, குருத்துவாரங்களைக் கைக்குள் கொண்டுவர முயலலாயினர்.

குருத்துவாரத்துக்கு அதிபதியாக இருப்பதென்பது சீக்கியரிடையில், சிறந்த செல்வாக்கைப் பெறுவதாகும்! அவர்களுக்குநிகர் அவர்களே!!

ஆண்டுதோறும் முப்பது இலட்சத்து மேற்பட்ட வருவாயைச்செலவிடும் பொறுப்பு அவர்களுக்குண்டு.

பல குருமார்களைஉண்டாக்குவதும்,பள்ளிகளை ஏற்படுத்துவதும் நிர்வாகிகளை ஏற்படுத்துவதும் அவர்கள் கையில்தான்.

இந்த நிர்வாகத்தினர் பெயர் சிரோமணி குருத்துவார பிரபந்தக்

கமிட்டி என்பது. இதில் நீண்ட நாள் தலைவர் தாராசிங்.

எப்படியாவது, அவருக்குச் 'சீட்டு'க் கொடுப்பதில்லை என்று, முடிவு செய்தனர் காங்கிரசாரும், கர்தாரும்.

தேசபக்த கட்சி என் றொன்று உருவாயிற்று. கம்யூனிஸ்டுகளின் கட்சி என்று இதனைச் சொல்லலாம். காங்கிரசுக்குத் துணைபோன கர்தாருக்கு இது ஒத்துழைத்தது.

கம்யூனிஸ்டு காங்கிரஸ்—இரண்டும் சேர்ந்து மாபெரும் தாராசிங்கைத் தோற்கடித்தன! இரண்டே இரண்டு ஓட்டில் அகாலிதளத்தின் தலைவர் தோற்ற இந்தச் சம்பவம் கடந்த ஆண்டில் நிகழ்ந்தது!!

குருத்துவாரத்தின் தலைமை, வரும் வருமானம் இவைகளின் மூலம் தாராசிங்கின் செல்வாக்கை அழித்துவிடலாமெனக் கனவு கண்டனர் காங்கிரசார். முடியவில்லை. 'குருத்துவாரம்' மாற்றாரிடம் சென்றும் அவருக்கு இருந்த மகத்தான செல்வாக்கு மங்கவில்லை.

மாற்றுக் கோஷ்டிக்கோ டில்லியின் ஆசி கிடைத்தது! ஆனால் சீக்கிய மக்களின் அன்பு எட்டவில்லை!!

அது தாராசிங் வசம் போய் எவ்வளவோ நாளாயிற்றே.

தாராசிங் ,வாளா இருக்கவில்லை! குருத்துவார சட்டத்தைத் திருத்தச்சொல்லித் துவக்கினார், ஒரு கிளர்ச்சி. மாநில அரசுடன், போராடினார்.

அரசு அடக்க முனைந்தது. தாராசிங் கைதுசெய்யப்பட்டார்.

பீதி! கலவரம்! குழப்பம்! எங்கும் மூளவே, அவர் விடுவிக்கப்பட்டார்.

உடனே, உலகுக்கு அறிவித்தார், சாகும்வரையில் மார்ச் 16-ந் தேதி முதல் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக. சீக்கிய சமுகமே அவர்பின்னால் திரண்டது.

அனுதாபப்பட்டினிகள் ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் திட்டமிடப்பட்டன.

பண்டிதர், கடிதம் எழுதும் அளவுக்கு முற்றிற்று.

இருவரும் சந்தித்தனர்! 85-நிமிடங்கள் பேசி முடிவுக்கு வந்தனர்!!

அடக்குமுறை வெல்லவில்லை— தலையாய தலைவர் என்பதை, மீண்டும் தாராசிங், தன் உறுதியின் மூலம் பெற்றுவிட்டார்.

நடுவில், காங்கிரசுக்கு இவர் துணைபோக நேர்ந்ததுண்டு! உண்மையில், "ஏனடா அப்படிச் செய்தோம்" என்று இவர் வருந்தாமலிரார்!! இவரிடம் சலுகைகளும் ஒப்பந்தங்களும் கண்ட, காங்கிரஸ் இவரது செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, அகாலிதளத்தையே அழிக்க 'சதி' செய்தது.

அகாலிதளம், தப்பிவிட்டது' தாராசிங் தனது அஞ்சாநெஞ்சினைக் காட்டி, இழக்கவிருந்த மதிப்பைப் பெற்றுவிட்டார்.

காங்கிரசுக்குத் துணைபோவோருக்கு என்ன கதி ஏற்படும் என்பதற்கு, ஒரு எச்சரிக்கை, இன்று இந்த சீக்கியப்பெரியார் எனலாம்.

★


புதுவையில்

# தி. மு. கழக சிறப்பு மாநாடு

மே திங்கள் 2, 3 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
புதுவை 'ரோடியர்' திடலில் நடைபெறும்.

தலைவர்:
எம். பி. சுப்பிரமணியம்,
பி.ஏ. பி.எல்., எம். எல். ஏ.

—★—

திறப்பாளர்:
பி. ஆர். கோகுலகிருட்டினன்,
பி.ஏ , பி.எல்.

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

கழக முன்னணி வீரர்கள்—நடிகர்கள் மற்றும் பலர் கலந்துகொள்வர்.

கலைஞர் கருணாநிதி பங்கேற்று நடிக்கும்
"உதயசூரியன்"
நாடகம் நடைபெறும்.

★

நாகூர் அனீபா
மதுரை-சந்திரா
இன்னிசை உண்டு.